# சிரித்திரன்

ஓடம் போ



நவம்பர் 1979 விலை ரூபா 1-00

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீங்கள் விரும்பும்
தேனான பாடல்களைத்
தெளிவாகப் பதிவு செய்ய

ஒலிப்பதிவுத்துறையில் அனுபவமிக்க
**'ரேடியோஸ் பதி'** யை நாடுங்கள்...

- தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் மும்மொழிப் பாடல்களையும் முத்தாகப் பதிவுசெய்ய
- வானொலிக்கருவி, ரேப் ரெக்கோர்ட் மணிக்கூடு ஆகியவற்றை திருப்திகரமாக திருத்தம் செய்ய...
- ரேடியோ கெஸட், ரேப்ரெக்கோர்ட் மணிக்கூடுகள் வாங்க...

## ரேடியோஸ்பதி

58, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7805

## சிரித்திரன்

ஒருவருட சந்தா: 15-00
ஆறுமாத சந்தா: 7-50

பணத்தை தபாற் கட்டளையாக எஸ். சிவஞான சுந்தரம் என்ற பெயருக்கு அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சிரித்திரன்
559. கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

ஈழத்தின் இனிய
இலக்கிய மாத இதழ்

மல்லிகை

கொழும்பு — மலையகம்
பகுதிகளைச் சேர்ந்த—

- சஞ்சிகை விற்பனையாளர்களும்.
- இலக்கிய நண்பர்களும்

சிரித்திரன் சம்மந்தமான சகல தொடர்புகளையும் கீழ்க்கண்ட முகவரியுடன் வைத்துக்கொள்ளவும்.

## செல்வம்

24, கதிரேசன் வீதி, கொழும்பு 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம் சிரிப்பே சீவியம்


## நல்லெண்ணெய் மகாத்மியம்

**நா**னும் எனது நண்பனும் பேசிக்கொண்டிருக்கும்போது மரத்தில் இருந்து விளையாடிக் கொண்டிருந்த அவர்மகன் தடாரெனக் கீழே விழுந்தான் அவர் ஓடிப்போய் பளார் பளாரென அவன் முதுகில் நாலு வைத்தார் ''பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாயிருக்கே! ஏன் விழுந்தபிள்ளையை மொத்தினய்'' என ஏதும் புரியாதவனாய்க்கேட்டேன். ''பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகுது. நல்லெண்ணை விற்கிற விலையில் ''இவன் நோவிற்கு எண்ணெய் வாங்குவதற்கு நான் எங்கு போவது" எனப்பொரிந்து தள்ளினார், நான் மவுனமாக நின்று பேசுவதையெல்லாம் கேட்டேன். ''பாரும் முந்தியகாலம் மாதிரியல்ல அன்று தோசை எண்ணெயில் தோய்த்தெடுத்துச் சாப்பிட்டோம். சுடு சோற்றில் சொதி மாதிரி ஊற்றி சாப்பிட்டோம். இன்று எண்ணெயில்லாது வயிறு சூடேறியிருக்கு. புகைச்சலைத்தான் கிளப்புகிறது. எண்ணையில்லாமல் வளரும் பிள்ளைகளைப் பார்க்கவெம்பி விழுந்த மாங்காய் மாதிரியிருக்கு அன்று நாலுபேர் காவிய வாகனத்தை இன்று இருபத்திநாலு பேராலும் காவமுடியாமலிருக்கு இருபது பேர் இழுத்த தேரை இலங்கை முழுக்க திரண்டாலும் இழுக்க முடியாமல் சில்லெடுக்கினம்'' என்றெல்லாம் நல்லெண்ணெயின் பெருமையைப் பேசிக்கொண்டே போனார்.

நான் சென்னையில் இருந்த காலத்தில் ஒருநாள் தலைவலி என்னை ஆள்க்கொண்டது. டாக்டரிடம் போனேன். நான் யாழ்ப்



பாணத்தவரென அறிந்ததும் "தலைவலிக்கு ஒருகாரணம் இரத்த அழுத்தம். நல்லெண்ணை நிறையப் பாவிப்பவர்களுக்கு இந்த நோயெல்லாம் வராதே'' என்றார் ''நான் மைனர் காலத்தில் நல்லெண்ணையை அருவருத்தனுன் வாசனைத் தைலம், வஸ்லின் கிறீம் இவைகள்தான் தலையில் தடவுவேன்'' என்றேன். அவர் அதற்கு ''ஓ ஐ சே... அதுதான் உன்தலையில் தலைமயிர் இல்லை, தலைவலி இருக்கு'' என்றார் 'சனி நீராடு' என எமது தமிழ் மூதாட்டியார் பாடியுள்ளார், இன்று எண்ணெய் விற்கிறவிலையில் அநேகமானோர் முழுக்குக்கே முழுக்குப் போட்டு விட்டார்கள். நல்ல வேளையாக எங்களை நரகாசுரன் வாரத்துக்கு ஒருமுறை எண்ணெய் வைத்து முழுகவேண்டும் என்று வரம் கேட்கவில்லை.

**ஒயில்வாகனத்தார்**

---

**எமது நேயர்களுக்கு!**

சிரித்திரன் சிறுகதைப்போட்டி விமர்சனங்கள் அடுதத இதழில் இடம்பெறும்.

சிரித்திரன் சிறுகதைகள் தரமானவை என வாசகர்கள் பாராட்டிக் கொண்டிருப்பதால் எழுத்தாளர்களின் கூடுதலான ஒத்துழைப்பை நாடுகின்றோம். சிறப்பான கதை ''சிரித்திரன் மகுடக் கதை'' என வெளியிடப்படும்.

நன்றி

ஆசிரியர்

---

ராஜு; என்ன சிவா குறுநகை?

சிவா: வியாபாரிகளின் கலப்படத்தால் உடம்பில் A. B. C வருகுதில்லை.
வாத்திமாரின் தூக்கத்தினால் படிப்பில் A.B.C வருகுதில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாகித்திய மணியும் இசை ராஜனும்

திரு T. M. S. சவுந்தரராஜன் அவர்களை வீரமணிஐயர் அவர்கள் திரு S. தியாகராஜா இல்லத்தில் சந்திக்க நேர்ந்தது திரு வீரமணிஐயர் அவர்களை கண்டதும் திரு. T. M. S எழுந்து கட்டித் தழுவியவாறே "கற்பகவல்லி நின்" என்ற உலகப் பிரசித்திபெற்ற அந்த மயிலாப்பூர் கற்பகாம்பாள் மீதான திரு வீரமணி அவர்களின் சாகித்தியத்தின் முதல் மூன்று வரிகளையும் பாடிக்கொண்டே அன்னாரை அன்பொழுக வரவேற்றார். அத்துடனில்லாமல் அவரை அங்கிருந்த அனைவருக்கும் அறிமுகம் செய்துவைத்தார். 1956 ஆண்டு தான் பாடிய 'கற்பகவல்லி நின்' என்ற ஆனந்த பைரவி ராகத்தில் அமைந்த அந்தப் பாடல் கேட்கின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் அந்தப் பாடலை மென்மேலும் மெருகேறி புதுப்பொலிவு பெற்று வருவதைதான் உணர்வதாகக்கூறி மெய்மறந்து கொண்டார். திரு தியாகராஜா அவர்களின் இல்லத்தில் குழுமியிருந்தோரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மெல்ல எழுந்து கொண்ட 'சிட்டிபாவு'வின் வீணை இசையை ரசித்தவாறே காலை மெல்ல அசைத்துத் தாளம் போட்டுக்கொண்டு சம்பாஷணையைத் தொடர்ந்துகொண்ட திரு T. M. S உலகில் தமிழ் இசை ரசிகர்கள் வாழுகின்ற பகுதிகளிலெல்லாம் லட்சக்கணக்கான இசைத்தட்டுக்கள் விற்பனையாகியிருப்பதை H. M. V இசைத்தட்டுத் தயாரிப்பாளர்கள் தனக்கு அறிவித்திருப்பதாகச் சொன்னார். அந்தப் பாடலைப் பாடியதன் பின்னர், அந்தப் பாடலை நான் திரும்பத் திரும்ப கேட்பதினாலும் பலமேடைகளில் ரசிகர்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்காகப் பாடிவருவதினாலும் எனது இந்த இசைத்துறைக்கு கற்பகாம்பாளின் அருள்கூடி வருவதாகக்கூறி பெருமைப்பட்டுக் கொண்டார்.

"ஸார்! நானும் நீங்களும் இதனால் பெருமைம்பட்டுக் கொள்ளக்கூடாது. இந்தத் தமிழ் இசை உலகமே உங்களுக்கு கடமைப்பட்டிருக்கு ஸார்!" என்பதைக் கூறி மீண்டும் ஒரு முறை கட்டித் தழுவிக்கொண்ட திரு T. M. S இன் அன்புப் பிணைப்பிலிருந்து தன்னை விடுவிக்க முடியாது மெய்மறந்து நின்றார் திரு வீரமணி ஐயர் அவர்கள்.

மோகன்

- மனிதனின் குரலில் தோன்றும் சங்கீதம் பூரணத்தன்மை அடைவதற்கு. கருத்தும் மொழியும் ராகமும் தாளமும் வேண்டும். நான்கும் ஒன்றில் ஒன்று சரியாகப்பொருந்தி ஒன்றையொன்று பூரணப்படுத்தி நிற்கவேண்டும்.

—ராஜாஜி

- அளவு கடந்து அனுபவித்தாலும் சன்மார்க்க உணர்ச்சிக்கும் சமய உணர்ச்சிக்கும் கேடு பயவாத புலனுகர்ச்சி இசை ஒன்றே,

—எடிசின்

### சார்லி சாப்ளின்பற்றி

**ஷா**

நூல்களைப் படித்து மேதையானவர் பலர்
ஆனால்
உலகத்தைப் பார்த்தே மேதையானவர் சார்லி சாப்ளின்.

**குருஷ்ஷேவ்**

எனக்கு டென்ஷன் (Tension) வரும்போதெல்லாம் கிரெம்ளின் மாளிகையில் சார்லி சாப்ளின் படங்களைப் பார்ப்பது வழக்கம்.

**சார்லி சாப்ளின்**

நான் கோடீஸ்வரன் ஆகிவிட்டேன் ஆனால் என்னால் பணக்காரனை நையாண்டி செய்யாமல் இருக்க முடியவில்லை.
ஏனெனில் ஏழ்மை என் ரத்தத்தில் ஊறியது—

**எச். ஜி. வெல்ஸ்**

"எழுதப் படிக்கத் தெரிந்தவனால் மட்டுமே என்னைப்புரிந்து கொள்ளுதல் சாத்தியம்"
"கல்வியறிவில்லாதவனும் உன்னைப் புரிந்து கொள்ளமுடியும் அதனால் வாழ்க்கையில் உயரமுடியும்"

லண்டனில் ஒருமுறை அரசகுடும்பத்தினருக்கும் பிரபுக்களுக்கு சார்லிசாப்ளின் 'City Lights' படத்தை திரையிட ஏற்பாடு செய்திருந்தார்கள்.
அக்காட்சிக்கு சார்லி சாப்ளினும் வருவதாக இருந்தார்.
சீமான்களும், சீமாட்டிகளும் தத்தமக்கு அருகில் ஒவ்வொரு சீற் ரிசேர்வ் பண்ணியிருந்தார், தங்களுக்கு பக்கத்தில் தான் சார்லி வந்து அமரவேண்டும் என்ற நினைப்பில்,
சார்லி வந்தார்—
நேரேபோய் ஒரு சாதாரண ஆனால் பிரபல்யமான மனிதருக்கருகில் அமர்ந்து கொண்டார்— அந்தமனிதர் -ஜோர்ஜ் பெர்னாட் ஷா.
சார்லியைக் கவர்ந்தது பணமல்ல அறிவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாயின் திருவுருவம்

**அன்புடையீர்!**




வணக்கம்; வரும் தைத்திங்களுக்குள் "தமிழ்த்தாய்" "தமிழ்த்தாய்" என்று மேடைகளிலும் எழுத்துக்களிலும் அருவமாக விளங்கிவரும் தமிழன்னையை ஓர் எழில்வடிவில் கொண்டுவர விரும்புகிறோம். தமிழ் மக்களின் கருத்துக்களைக் கொண்டு உருவாக்க இருக்கும் தமிழன்னையின் திருவுருவின் தோற்றத்தினைப் பட வடிவிலும், செப்பு வடிவிலும், சிலைவடிவிலும் கொண்டுவரத் தமிழுணர்வு உந்துகிறது. இன்றைக்கு மேலோட்டமாகப் பாட்டு வடிவில் தமிழன்னை குண்டலகேசியைக் காதிலணி குண்டலங்களாகவும், பத்துப் பாட்டு, எட்டுத்தொகைகளைக் கழுத்திலணி ஆரங்களாகவும், சிந்தாமணியை அவ் ஆரங்களில் அணி செய்யும் பதக்கமாகவும், வளையாபதியைக் கையிலணி வளையலாகவும், மணிமேகலையை இடையிலணி மேகலையாகவும், சிலப்பதிகாரத்தைக் காற்சிலம்பாகவும், குறளைச் செங்கோலாகவும், தொல்காப்பியத்தைத் தலைமுடியாகவும் கற்பனை செய்து வருகின்றனர். அவ்வடிவில் "இருந்த வண்ணத்தில்" ஓர் ஓவியர் பண்டிகை மலர் ஒன்றில் படம் வரைந்துள்ளார். விழுமிய தமிழுணர்ச்சியும் நாட்டுப்பற்றும் பக்தியும் இற்றைநாள் தமிழ் மக்களுக்கு மிகவும் வேண்டிய உணர்வுகளாம். இவ்வுணர்வினை உருவாகப்போகும் தமிழன்னை ஊட்டக்கூடும். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் பிள்ளையார் கோயிலும் அனுமார் கோயிலும் தோன்றும் இக்காலத்தில் தமிழன்னைக்குத் தோற்றமும் இல்லாதது குறையேயாகும்.

தமிழ்கூறும் நல்லுலகத்தில் தமிழ்ச்சக்தி - தமிழர்களின் நல்வாழ்வாம் தமிழ்த்தாய் - எவ்வடிவுடனும் வனப்புடனும் இருக்கவேண்டும் எனச் சீரிதாய்ச்சிந்திக்க இஃது ஓர் நல்ல வாய்ப்பு. வடிவம் தொடர்பான நும் படைப்புக் கருத்துக்களைக் கீழ்க்கண்ட முகவரிக்குத்தெரிவிப்பீர்களேயானால் கோயில்களிலும், படங்களிலும் குடிகொள்ளப்போகும் அந்தத்திருவுருவம் தமிழ்ச்சமுதாயம் ஒருமுகமாக வணங்கிடும் சக்தியாக இருக்க வழியுண்டாகும்.

கருத்துக்கள் தெரிவிக்கவேண்டிய முகவரி:

**டாக்டர் ஆறு. அழகப்பன்.**
தமிழ் இணைப் பேராசிரியர்.
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
அண்ணாமலை நகர் - 608101



● ரவுடிக்கும் பெரும்மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன சொல்லு பார்க்கலாம்

□ தெரியவில்லையே!

● ரவுடி உயிரோடிருக்கும்போது சந்தியில் நிற்பான் பெரியவன் இறந்தபின்பு சந்தியில் நிற்பான் சிலையாக.

—அதிமதுரம்

● ●

மனைவி: குழந்தைக்கு மருந்து வாங்க தந்த பணத்தை குடித்துவிட்டு வருகிறீர்களே!

கணவன்: குழந்தைகள் ஆண்டு கொண்டாடிறேன்.

—ஜோக்கிரட்டீஸ்

● ●

பிச்சைக்காரன்: அம்மா தாயே பசிக்குது.

பெண்: திரைவிருந்து நேரம் வந்திட்டது... ரேடியே போட்டு விடிறேன்.

—ஜோக்கிரட்டீஸ்

□ □

கடை வியாபாரி: என்ன பாலில் தண்ணி கலந்திருக்கே!

பால் வியாபாரி: நீங்கள் எனக்கு விற்ற புளியில் தவிடு கலந்திருந்ததே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதம்பவனம்

தமிழ்ச்சிறுகதையுலகின் மூல வித்தாகிய புதுமைப்பித்தன் அவர்கள் பழமைபேசிக் காலத்தை வீணுக்கும் முறைமையை நன்கு கண்டிக்கின்ருர். அவர் தமிழ் இலக்கிய நிலைபற்றிக் கீழ்வருமாறு வரைகின்ருர்.

''நமது கலைவளர்ச்சி பண்டைப்பழம் கணக்காக, பொருட்காட்சிச் சாலையிலே வைத்த அபூர்வங்களாகவே இருக்கின்றன. ''தமிழில் இல்லாதது இல்லை இளங்குமரா!'' என்ற கிழட்டுத் தத்துவம் - ஆழ்ந்த உணர்ச்சியற்ற 'போலித்தத்துவம்' (Dilletantism) ஒழியவேண்டும். இப்பொழுது இலக்கியத்தின் பெயரால் நடக்கும் 'ஆராய்ச்சிகள்' முதல் குரங்கு தமிழனுகத்தான் மாறியதா என்பது முதல், கம்பன் சைவனு? வைஷ்ணவனு? தமிழ் எழுத்துக்கள் ஓம்!! என்ற முட்டையை உடைத்துக்கொண்டு வெளிவந்த வரலாறுவரையுள்ள இலக்கியத்துக்குப் புறம்பான 'தொண்டு'களை யெல்லாம் அப்படியே கட்டிவைத்துவிட்டு இலக்கியத்தை அனுபவிக்கும்முறையை உணர்த்த முன்வரவேண்டும்.''

o———o

அன்புவழிநடந்த அண்ணல் மகாத்மா பற்றி புதுக்கவிஞர் மு. மேத்தா அவர்கள் பாடிய கவிதையின் சிலவரிகள் சிந்தனைக்கு விருந்து

''சேரிகளில் மட்டும் நீ
யாத்திரை செய்வாய் என்பதை
தெரிந்து கொண்டதால்
உன்னை நேசித்தவர்கள்
நேசத்தையே
சேரியாக மாற்றிவிட்டார்கள்''

O———O

வறுமைக்கன்னி கலைஞனின் அரவணைப்புக்குள் சிக்குகிருள்.

அவள் இருக்கும்போது அவனுள் கலைத்துவம் பொங்குகின்றது.

அவள் அவனைவிட்டு விலகும்போது, கலைத்துவமும் மங்குகின்றது.

O——O

''தாயின் மனம் எவனிடம் இருக்கிறதோ, தாயின் பொறுமை எவனிடம் இருக்கிறதோ அவனே உண்மையான சீர்திருத்தக்காரன்.

பணத்திமிரினுல் மனிதனுடைய இரத்தத்திலுள்ள தியாக சக்தி குறைகிறது, சிற்றின்ப வேட்கை வளர்கிறது. பல அல்லல்களுக்கிடையே, பல ஏமாற்றங்களுக்கிடையே மனிதனுக்கு நம்பிக்கையூட்டும் ஒரு பொருள் வேண்டியிருக்கிறது. அந்த மங்கலப்பரம் பொருள்தான் இறைவன்''

—காண்டேகர்

O———O

இலங்கையின் முதுபெரும் எழுத்தாளர் வ. அ. இராசரத்தினம். அவர் நமது ஊர்பெண்கள் அதாவது வாயளக்கும் பெண்கள் பெருமையை மிகவும் சுவைபதும்பக் கூறுகிருர். ''கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்த மார்க்கோனியைப் பொது அறிவுப் பாடம் படிக்கும் ஐந்தாம் வகுப்பு மாணவன் தொடக்கம் பெருத்த பெருத்த விஞ்ஞானிகள் எல்லாம் போற்றிப் புகழுகின்ருர்கள். என்னைக் கேட்டால் ஒவ்வொரு கிராமத்திலிருக்கும் குறிப்பிட்ட இரண்டு மூன்று பெண்களுக்கும் கட்டாயமாக மார்க்கோனியைவிட மேலதிகமான மரியாதைகாட்டப்படல் வேண்டுமென்பேன்.

ஏனெனில் மார்க்கோனியின் வானெலி செய்திகளை வெறும் பிண்டமாகத்தான் பிறருக்குப் பரப்புகிறது. ஆனுல் இந்தப்பெண்களின் தந்திச் செய்திகளுக்குக் கண், காது, மூக்கு எல்லா அவயங்களுமே இருக்கும்.''

O———O

''உண்மையான கலைப்பொருள் தெய்வ சிருஷ்டியின் சாயலேயாகும்.'' மைக்கேல் ஆஞ்சலோ.

''குயில்''

## கொடுத்து வைத்தவன்

மிகவும் செல்வாக்காக வாழ்க்கையை அனுபவிப்பவனைக் கண்டால் ''அவனுக்கென்ன கொடுத்து வைத்தவன்'' என்று கூறுகிறோம்.

இந்தச் சொல்லில் எத்தனை நல்ல ஒரு தத்துவம் அடங்கியிருக்கிறது பாருங்கள்.

முற்பிறவியில் ஏழைகளுக்கும், கஸ்டமுற்றவர்களுக்கும் தான தருமங்களைச் செய்தவன் இப்பிறவியில் அதன் பலனை அனுபவிக்கிருன். என்பதையே ''கொடுத்து வைத்தவன்', என்ற சொல் விழக்குகிறது.

நன்ருக வாழ்பவர்களைப் பார்த்துக் ''கொடுத்து வைத்தவர்கள்'' என்று கூறும்போது நாமும் இப்பிறவியிலாவது கொடுத்து வைத்தால் அடுத்த பிறவியில் அனுபவிக்கலாம் என்ற எண்ணம் வந்தால் அதுவே இச்சொல்லால் எமக்குக் கிடைக்கும் பிரயோசனமாகும்.

''அகிலாங்கன்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரம் போ

காரக்காரன்: ஓரம் போ ஓரம் போ

பாதசாரி: எப்படி ஐயா பாதை ஓரம் போவது ஓவசியர் ஐயா ஓரமெல்லாம் கல்லுக் குவித்திருக்கிறாரே!

● ●

● என்ன ஓரம் போ ஓரம்போ என்று கத்துறே!

□ 'எல்' போர்ட் போட்டகார் வருகுது.

□ □

எருமைக் கன்று: ஏனம்மா ஓரம் போ ஓரம் போ என்று கத்துறீங்க.

எருமை: மனிதன் பாதையிலே குந்தியிருந்து வம்பளக்கிறாங்க... அதுதான் ஓரம் போ என்றேன்.

□ □

பைத்தியம்: ரயில் விபத்துகளுக்குக் காரணம் என்ன?

2ம் பைத்தியம்: தண்டவாளத்தின் மத்தியில் நடந்து போனால் ரயிலுக்கு ஓரம் போகத் தெரியாது.

● ●

● சைக்கிள் றேஸ் வீதியில் இன்று...வீதியில் உள்ள ஆட்களை ஒதுங்கச்சொல்லி ஒலி பரப்ப ஆளில்லையே

□ ஓரம் போ ஓரம்போ பாடலை காரில் ஒலிபரப்பிக்கொண்டு போங்க.

□ □

● வீதியில் ஓரம் போவதும் ஆபத்தாக இருக்கிறது.

□ ஏன்?

● கார் தண்ணி அடிச்சுக் கொண்டு ஓடுது காரக்காரனும் தண்ணி அடிச்சுக்கொண்டு ஓடுகின்றான்.

# சிறுவர் ஆண்டு

சிறுவன்: அப்பா பாடத்தை மட்டும் நாங்கள் கொப்பி அடிப்பதில்லை. பழக்க வழக்கங்களையும் கொப்பி அடித்திடுவம்... நீங்கள் சிகரட் சாராயக் குடிப்பழக்கத்தை நிற்பாட்டினால் என்ன?

□ □ □

ஒருவர்: என்பிள்ளைக்கு உங்க பாடசாலையில் இடம் வேண்டும்.


அதிபர்: மன்னிக்கவேணும் பாடசாலையில் இடமில்லை.

ஒரு: சேர் சிறுவர் ஆண்டில் உந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை.

□ □ □


சிறுமி: டாக்டர் ஊசி போடாது இனிப்பு மருந்து தாங்க இது சிறுவர் ஆண்டு.

□ ★ □



ஆசிரியர்: எருமை கழுதை மாடு

மாணவன்: சேர்... உப்படி எல்லாம் என்னை ஏசாதையுங்க இது சிறுவர் ஆண்டு.



பாலு: என்னடா ஆசிரியர் படிப்பிக்காமல் தூங்குகிறார்.

வேலு: சிறுவர் ஆண்டு கொண்டாடியகளை.

□ □

தந்தை; பக்கத்து வீட்டில் ஓடிப் போய் ஒரு பத்துரூபா கடன் வாங்கி வா.

சிறுவன்: சிறுவர் ஆண்டு உப்படியெல்லாம் என்னை சிறுமைப் படுத்தாதையுங்க.

□ □ □

தந்தை; இந்தா காசு ஐஸ்கிறீம் சாப்பிட்டு வீட்டில் இரு... நானும் அம்மாவும் படம் பார்த்திட்டு வருகிறோம்.

சிறுவன்: அப்பா நீங்கள் என்னை லஞ்சம் வாங்கப் பழக்குறீங்களா!

□ □

எஜமானி: படுகம்... உன்னை யார் ஜிம்மிக்கு வைத்த பாலைக் குடிக்கச் சொன்னது.

வேலைக்காரச் சிறுவன்; ! ! !

□ □

வேலைக்காரச் சிறுவன்: அம்மா... இன்று என் பிறந்தநாள்... என்மேல் ஐஸ்தண்ணி ஊத்துங்க. சுடுதண்ணி ஊத்தாதையுங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி. கணேசவேல் நல்லூர்

கே: யாழ்ப்பாணத்தில் பெண்கள் நடமாட்டத்தைத்தான் கூடுதலாகக் காண முடிகின்றது. காரணம்

ப: மானிப்பாய், சண்டிலிப்பாய், கதிரிப்பாய், கோப்பாயிலுள்ள ஆண்களெல்லோரும் இன்று டுபாயில்.

● ●

செல்வி சுலோசனு பாலசிங்கம் மட்டுநகர்

கே; கும்பகர்ணன் இன்று இருந்தால்?

ப: நிம்மதியாய்த் தூங்குவதற்கு பாடசாலையைத் தேர்ந்தெடுப்பான்.

● ●

சி. கருணுகரன் பரந்தன்

கே: பெண்ணிற்கு அழகு தருவது எது?

ப: பொட்டு அல்ல, நகை அல்ல நீட்டு அல்ல, காஞ்சிப்பட்டு அல்ல, லட்டான குணம்.

● ●

சிவனேஸ்வரி நாகராசா சாவகச்சேரி

கே: மனித வாழ்க்கை என்பது என்ன?

ப: வாழ்க்கை என்பது ஒரு போராட்டம். போராட்டமாகையால்தான் மனிதன் பிறக்கும்போது முஷ்டி பிடித்துக் கொண்டு பிறக்கின்றான்.

● ●

சுபானு பரமேஸ்வரன் நீர்வேலி

கே: நீர் தனிமையை விரும்பும் போது என்ன செய்வீர்?

ப; கலைத்துவமான தமிழ்ப்படம் ஓடும் தியேட்டருள் புகுவேன்

● ●

ம. சுபேந்திரன் புலோலி

கே: எது இலக்கியமாகாது?

ப: மனிதனை வாழ வாழவைக்கும் இலக்கைத் தவறியபடைப்பு இலக்கியமாகாது.

● ●

சே. ராசநாதன் மானிப்பாய்

கே: மாரிகாலம் உமக்குப் பிடிக்குமா மகுடியாரே?

ப: நன்றாகப் பிடிக்கும். தவளைகளின் சுருதி பேதமில்லா ''ஒக்கெஸ்ரா''வை ரசிக்க முடியுமல்லவா.

● ●

சி. ஞானசுந்தரம் திருகோணமலை

கே; சுவையாகச் சமைத்துப் போடும் மனைவி மனையில் இருக்க சம்பளமெல்லாவற்றையும் ஹோட்டலில் கொட்டும் கணவனைப் பற்றி உமது கருத்து என்ன?

ப; கடை அப்ப வள்ளல்

□ □

ம. கனகேந்திரன் பளை

கே: இலங்கை வானொலி நிகழ்ச்சிகளை எல்லோரும் ரசிப்பதுண்டா?

ப: பிறந்தநாள் வாழ்த்தை அறுதைக் குழந்தைகளும் மரண அறிவித்தலை நோயாளிகளும் ரசிப்பதில்லையே!

□ □

சுகுமாரி சிவபாதம் கரவெட்டி

கே: மனிதனுக்கு எம்மால் செய்ய முடியாத உதவி எது?

ப: தற்புகழ்ச்சியில் இருந்து அவனைக் காப்பாற்ற முடியாது?

□ □

க. சிவகுமாரன் விஸ்வமடு

கே: திருமணமாகாத பெண்கள் பற்றி உம்து கருத்து?

ப: பிற்போக்கற் அடிக்க முடியாத புனிதவதிகள்.

★ ★

சி. சுந்தரநடராசா புத்தூர்

கே: பூலோகத்தில் சொர்க்கம் நிறுவமுடியுமா?

ப: சினச் சஞ்சிகைகளைப் பார்க்கும்பொழுது சொர்க்கம் நிறுவப்பட்டு விட்டதுபோல் தோன்றுகிறது.

★ ★

சி. சிவமணி மன்னர்

கே: இதயசுத்தி இல்லாத நட்பு எப்படிப்பட்டது?

ப: உமது பரீட்சை முடிவை விழித்திருந்து காத்திருக்கும்,

★ ★

செல்வி விஜேநினி யாழ்ப்பாணம்

கே: பாலும் கசந்ததடி கிளியே படுக்கை நொந்ததடி என என் தோழி பாடுகின்றாள்... இதன் அர்த்தம் என்ன?

ப; அரவணைத்த அத்தான் அராபியாவில் என்பதுதான்.

★ ★

கு. சிவநேசன் பரந்தன்

கே: பெண்கள் இருட்டிற்குப் பயமா?

ப: தியேட்டர் இருட்டிற்குப்பயமில்லை:

★ ★

செல்வி சுகிர்தராணிராஜகோபால் நல்லூர்

கே. சஞ்சிகைகள் நிலைபற்றி உமது கருத்து?

ப: கைதுடைக்கும் கைக்குட்டை என ஹோட்டல் முதலாளிகள் நினைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு. வடிவேல் அச்சுவேலி

கே; அன்றைய யாழ்ப்பாணப் பொருளாதாரத்திற்கும் இன்றைய யாழ்ப்பாணப் பொருளாதாரத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப; அன்று மலேயாளத்திலும் மலாயாவிலும்இருந்து பணம் வந்தது. இன்று மத்திய கிழக்கிலிருந்து பணம் வருகின்றது.

★ ★

ப. பரமநாதன் ராமநாதபுரம்

கே: ரெயிலருக்கும் டாக்டருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: ரெயிலர் கத்தரிக்கோலே பொக்கட்டிற்குள் வைத்துத்தைப்பதில்லையே!

● ●

மு. தனபாலசிங்கம் அச்சுவேலி

கே: ஒருவன் பழத்தைச்சுவைத்து விட்டு கொட்டையை உன்முகத்தில் வீசினுல்?

ப: நானேய விருட்சத்தை வழங்கிய வள்ளலென வாழ்த்துவேன்.

● ●

சி. சிவலோகநாதன் வவுனியா

கே: இந்தியா இலங்கையின் கூட்டுத் தயாரிப்பால் சினிமாக் கலே வளம் பெறுமா?

ப: ஒட்டுமாங்கனி இனிக்கும்... ஒட்டுச் சினிமாவும் ரசம் கொட்டத்தானே செய்யும் எதிர் பார்ப்போம்.

● ●

த. தம்பிராசா கொடிகாமம்

கே; சூடுகண்ட பூனே அடுப்பங்கரை போகாது என்கிருர்களே!

ப: உண்மை மனிதனேப்பொறுத்தவரை அது பொய். விவாகரத்துச் செய்தவர்கள் மீண்டும் திருமணம் செய்கின்ருர்களே!

ம. சின்னராசா கிளிநொச்சி

கே: வீட்டுக்கு உதவாது கண்டவர்க்கும் உதவும் மைந்தன் எப்படிப்பட்டவன்,

ப; ரேட்டோர முருங்கைமரம்

● ●

சி. மனேகரன் மன்னூர்

கே: தமிழன் விருப்பம் என்ன?

ப: வள்ளுவன் குறளே வையகமெல்லாம் வாரி இறைக்க விரும்புகின்ருர்கள். ஆனல் தமிழ்ப்பிரதேசங்களில் இறைத்து ஒன்றுமே விளேயவில்லே

□ □

ப. ராமநாதன் புத்தூர்

கே: இன்று யார் ஏழை, யார் பணக்காரன்?

ப: லட்சாதிபதி ஏழை, கோடீஸ்வரன் பணக்காரன்.

● ●

சி. செல்வராசா பளே

கே: பெண்கள் திருமணம் செய்ய விருப்பும் மர்மம் என்ன?

ப: தங்க நகையை காவல்புரிய ஒரு காவல்காரன் தேவையல்லவா,

● ★

ந. முத்துக்குமார் மல்லாகம்

கே: இலங்கைக்கும் இந்தியாவிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப: இந்தியாவில் தடைசெய்யப்பட்ட பாடல் இலங்கை வானெலியில் ஒலிபரப்பப்படும் இலங்கையில் தடைசெய்யப்பட்ட பாடல் இந்தியாவி ல்ஒலிபரப்பப்படும்.

□ □

த. மயில்வாகனம் கொடிகாமம்

கே: எமது அரசியல் வாதிகளுக்கு கட்சிப்பற்று உண்டா?

ப:சிலருக்கு அது வைப் பா(ர்)ட்டி

# சொல் நயம்

REST HOUSE என்பதன் தமிழாக்கம் வாடி வீடு என்று காணப்படுகிறது. 'வாடி வீடு' என்று ஏன் பெயர் வைத்தார்கள் தெரியுமா?

பண்டிதர் வீரகத்தி அவர்கள் இதற்கு ஓர் நகைச்சுவையான விளக்கத்தைக் கொடுத்தார் ''தெருவில் போவோர் வருவோர் எல்லோரையும் வாடி! வாடி! என ஆவலுடன் வரவேற்பதால்தான் 'வாடி வீடு' என்று பெயர் வந்தது.''

வாடி என்று செல்லமாக ஆண் பெண் இருபாலாரையும் அழைப்பது வழக்கம்.

தமிழ் இலக்கணத்தில் 'உரிச்சொல்' என்று ஒன்று இருக்கிறதல்லவா. இந்தஉரிச்சொல் தமிழ் இலக்கணத்தில் பலருக்கு பலசிக்கல்களே உண்டாக்குகிறது.

'உரிச் சொல்' என்று எப்படிப் பெயர் வந்தது என்ருல் எல்லோரும் அந்தச் சொல்லே உரி உரி என்று உரித்து விட்டபடியால் தான் வந்தது என்று நகைச்சுவையாகக் கூறுகிருர் பண்டிதர் வீரகத்தி.

கணவனேப் பிரிந்த காரிகையரின் உடலில் வெள்ளே நிறத் தேமல் படர்வதாக கவிஞர்கள் கூறுகிருர்கள். இதனேயே 'பசலே' என்றும் கூறுகிருர்கள்,

பிரிவுவேதனேயில் காதல்இச்சையில் இவ்வகைப் 'பசலே' படர்கிறது. இதற்கு 'சுணங்கு' என்றும் ஒருபெயர் உண்டு.

'பசலே'க்கு 'சுணங்கு' என்று ஏன் பெயர்வந்தது என்றுகேட்டபோது பண்டிதர் வீரகத்தி பசலே படர்ந்திருப்பதைக் கண்டால் கொஞ்சநேரம் அந்தப் பெண்ணுடன் நின்று 'சுணங்கிப்'போதல் நல்லது அதனுல்தான் 'சுணங்கு' என்று பெயர் வந்தது. என்று நகைச்சுவையில் விளக்கினுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயக் 'கலம்'

● சென்ற இதழில் அச்சுவேலி மண்ணைப்பற்றியும் அங்கு வாழும் 'விவசாயச் சித்தர்கள்' பற்றியும் 'நாரதியன்' அவர்களின் கருத்து மறுக்க முடியாத உண்மையே. புகையிலை, வெங்காயம் மட்டுமல்லாது உருளைக்கிழங்கு, பீட்ரூட், ஆகிய பயன்தரு விவசாய பொருட்களை அறிமுகமாக்கி உற்பத்தி செய்ய வைத்த முன்னோடிகள் அச்சுவேலி விவசாயிகளே...

—க. மாணிக்கம்
அச்சுவேலி - வடக்கு

● 'கண்மணி'க்கு பாராட்டுகள் மனோரம்மியம் - இலக்கியச் சிமிழ் இரண்டும் தித்திப்பானவை தர்மராஜாவின் 'இலக்கியத்தில் நகைச்சுவை' அறிவுக்கும் மனதுக்கும் விருந்து.

—இ. சிவானந்தன்
பெரியமாவடி, சாவகச்சேரி

● இலக்கியச் சிமிழ் பகுதியில் வந்த முத்தான முத்துக்கள் தமிழன் ஒவ்வொருவனது நெஞ்சத்திலும் இருக்கவேண்டியசொத்தாகும்தொடர்க...

சின்ன இராஜேஸ்வரன்
உருத்திரபுரம்

● சிரித்திரனின் அதுநன்று இது நன்று என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை ஏனெனில் 'சிறப்பற்ற பகுதி' எதுவுமேயில்லை. ஆனால் ஒரு குறை. குறுக்கெழுத்து வெண்பா...போன்றபோட்டிகள் கண்ணாமூச்சி ஆடுகின்றனவே ஏன்?

பா. வளர்விழி
'அன்னை இல்லம்'
அளவெட்டி வடக்கு

● பலே ஆளய்யா நீர். சிரிக்க வைத்தே கண்ணீரை வரவழைக்கிறீரே...அத்துடன் சிந்திக்கவும் வைக்கிறீரே...

எஸ். எம். எம். றபீக்
சாய்ந்தமருது-04

● சென்ற இதழில் கணபதி கணேசனின் பலவீனங்களே பலங்கள் சிறுகதை யதார்த்தமான சிந்தனையைக் கவர்ந்த படைப்பு. இதன் ஆசிரியருக்கும், சிரித்திரனுக்கும் பாராட்டுகள்.

நா மகேந்திரலிங்கம்
சங்கானை கிழக்கு

● கடந்த இதழ் தாமதமாக வந்தாலும் தரமாக இருந்தது மூன்று சிறுகதைகளும் நன்றாக இருந்தன. போட்டிக் கதைகள் இரண்டும் உள்ளத்தைத் தொட்டன.

ச. முருகானந்தன்
மருத்துவபீடம்
கைதடி.

● சிரித்திரன் என்று சொல்லச்
சிரித்திரன் என்று சொல்லிச்
சிரித்திரன் வரும் பேதெல்லாம்
சிரித்திரா திருப்போர்யாரோ

தில்லை. சிவா.
இடைக்காடு, அச்சுவேலி.

● தென்னக அகத்தில் சிரித்திரன்

என்மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய உயர்திரு ஆசிரியர் அவர்களுக்கு வணக்கங்கள்பல. நான் தங்களது சிரித்திரன் இதழை அவ்வப்போது அனுப்புவதால் சிரித்திரன் இதழை படித்து சிரித்து மகிழ்ந்து வருகிறேன். தமிழகத்தில் நகைச்சுவைக்கென்று இதுவரை எந்த இதழும் வெளிவரவேயில்லை. நகைச்சுவைக்கென்று பத்திரிகை நடத்துவது மிகவும் கடினம். அப்படியிருக்க கடந்த பதினேழு வருடங்களாக மாதந்தோறும் நகைச்சுவை ததும்ப தாங்கள் வெளியிட்டுக் கொண்டிருப்பதை பாராட்டாமல் இருக்கவே முடியாது.

மேஜர் தாசன்
S. P. B. காலனி, ஈரோடு 10
தமிழ்நாடு.

## ஊக்க மாத்திரை

"மக்கள் தங்கள் சொந்தக் குறைகளை உணர்வதில்லை. என குற்றம் சுமத்தப்படுகிறது. ஆனால் மக்கள் தங்கள் சொந்த வல்லமையை உணர்வதில்லை என்பது தான் உண்மை. மக்கள் பூமியைப் போன்றவர்கள். தங்களிடம் எங்கே தங்கம் தேங்கியிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளாமல் இருக்கின்றனர்."

'ஸ்விப்ட்'

● தேர்தலில் யார் ஜெயித்தாலும் தோற்றுப்போவது மக்கள்தான்.

'ஃபேமினா'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் ஒருவனல்ல....



**சிரித்திரன்**
**மகுடக் கதை**

✶ மாத்தளை சோமு ✶

ஜன்னல் அருகே நின்று மத்தியில் கம்பீரமாக நிற்கும் ஸ்கூலைப் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு கண்கள் கலங்க ஆரம்பித்தன. இன்னும் கொஞ்ச நேரம் அப்படியே நின்றால் அந்தக் கண்களிலிருந்து கண்ணீர் கொட்ட ஆரம்பிக்கும்.

அவன் ஜன்னலை விட்டு நகர்ந்து நாற்காலியில் உட்கார்ந்தான். அப்போது அவனுடைய பார்வையில் அந்த நீல்நிற சூட்கேஸ் பட்டது அந்த சூட்கேசில் அவனுடைய எல்லாப் பொருட்களும் அடங்கியிருக்கின்றன. ஒரு பயணம் போவதென்றால் அந்த சூட்கேசும் அதனுள் இருக்கும் பொருட்களும் அதிகமானவைதான். ஆனால் அவனுடைய முழு வாழ்க்கைப்பயணத்துக்கும் அவைகள் அதிகமானதென்று சொல்ல முடியுமா? அவனிடம் இருக்கும் அசையும், அசையா சொத்துக்கள் எல்லாமே அந்த சூட்கேசில் இருப்பவைதான்...

நாற்காலியை விட்டு எழும்பிய அவன், அந்த சூட்கேசை தூக்கிப்பார்த்தான். அவ்வளவு பாரமாகத் தெரியவில்லை. ஒரு ஆள் தூக்கிப்போகக் கூடியபாரம் தான்... ஆனால் அந்தப்பெட்டியைப் பார்க்கும்போது தன்மனதில் கிளம்புகின்ற எண்ணங்களின் பாரத்தைத்தான் அவனால் தாங்க முடியவில்லை... இத்தனை நாட்களும் உடுத்தியதையும் சொந்த தேவைக்காக வைத்திருந்ததையும் அப்படியே அந்த சூட்கேசில் எத்தனை சுலபமாக வைத்தாகி விட்டன! ஆனால் இந்த மனதைமட்டும் அவனால் அடக்கிவைக்க முடிந்ததா? அது இன்னமும் அந்த 'வோர்டர்ஸின் உள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கிறது. அவன் எடுத்த முடிவுக்கு வந்த பின்னரும், இன்னமும் அந்த முடிவுக்கு வந்தது சரியா, தவறா? என்று ஆராய்ச்சி செய்து பார்க்கிறதன் மனதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை...

நேற்றுவரை ஸ்கூல் மாஸ்டராக இருந்த அவன், அந்தத் தோட்டத்தை விட்டுப் போவதென்றும் மாஸ்டர் வேலையை உதறுவதென்றும் உறுதியாக இறுதியாக முடிவு எடுத்திருந்தான். ஆனால் அவனால் இன்னமும் அந்த முடிவின்படி தைரியமாக நடக்க முடியவில்லை...

ஜன்னல் அருகே வந்து நின்றான் அவன். அவனுடைய பார்வை ஜன்னல் வழியாக நழுவி வெளியே ஓடியது. ஒரு கமிராவின் மூலம் பார்ப்பதுபோல் அந்த ஜன்னல் காட்சிகள் அழகாக இருந்தன... வெளியே இயற்கை அன்னை நடந்துபோக ஒரு பச்சைக்கம்பளம் விரித்தது போவது தேயிலைச் செடிகள் நின்றுகொண்டிருந்தன. அதே தேயிலைச்செடிகள் யாரோ ஒருத்தர் நடந்து போக சற்றுவிலகி நின்று செம்மண் நிறத்தில் நடைபாதை போட்டிருந்தன. அதில் நடந்து போனால் அந்த எஸ்டேட் ஸ்கூலுக்குப் போகலாம்... ஓ! அந்த ஸ்கூல்கூட அழகாக ஜன்னல் வழியே தெரிகிறதே! அந்த ஸ்கூலையே பார்த்தான்... அதில்தான் அவன் மாஸ்டர் நேற்றுவரை... இன்று, அவன்தான் அந்தஸ்கூலை விட்டு விலகிவிட ராஜினாமாக்கடிதம் எழுதி விட்டானே! இனி அந்தக் கடிதத்தைக் கொடுத்து விட்டு அந்த சூட்கேசைச் தூக்கிக்கொண்டு போக வேண்டியதுதான்...

எந்த ஸ்கூல் ஆசிரியர் இல்லாமல் மூடப்பட இருந்ததோ, அந்த ஸ்கூலை மூடாமல் தானே ஆசிரியராக பணிபுரிந்து காப்பாற்றினானே, எந்த ஸ்கூலில் வேலை செய்வதை ஒருபெரியசமூகசேவை என்று நினைத்தானே, அந்தஸ்கூல் வேலையை உதறிவிட்டு நகர்ப்புற ஸ்கூலில் சேவை செய்யப் போகிறானாம்... அதற்காகத் தான் அந்த ராஜினாமாக் கடிதம்...

தன்னை இப்போது வேறு ஒருத்தனாக விலகிநின்று பார்க்கும்போது அவனுக்கு தன்மீதே ஒரு கசப்பும் வெறுப்பும் பீறிட்டுக் கொண்டு வருகிறது...!

அன்று 'எஸ்டேட் ஸ்கூலில் படித்துக்கொடுத்து லயமே உலகமென்று கிடக்கின்ற மனிதக்கூட்டத்தின் வாரிசுகளை அறிவு வெளிச்சத்திற்கு கொண்டு செல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேன்! இது எனது லட்சியம்! இதையாராலும் தடுக்கமுடியாது' என்று யாரிடம் ஆவேசமாக சத்தம் போட்டானோ அவரிடமே இப்போது அடக்கமாக சரணடைந்து விட்டானே!

போன மாதம் அவன் அப்பா வந்திருந்தார். அவரோடு அம்மாவும் வந்திருந்தாள்.

''இந்த தோட்டத்து ஸ்கூல்ல வேல செஞ்சு என்னத்தை காண போற ஆடுமாடுகளை மேய்க்கிறதும் இங்க படிச்சிகொடுக்கிறதும் ஒண்ணுதான்... நீ சரின்னு சொல்லு... டவுண் ஸ்கூலுக்கு எம். பி யை பிடிச்சி டிரான்சர் வாங்கித்தாறேன்...''

அவனுடைய அப்பாவும் அம்மாவும் ஏககுரலில் ஏக தீர்மானத்தை வெளியிட்டார்கள்.

அவன் மௌனமாக இருந்தான்...... அவனுடைய நினைவுகள் அந்த ஸ்கூலைச் சுற்றிசுற்றி வந்தன. நகரத்திலிருந்து இருபது மைல் தூரத்தில் இருக்கும் அந்த எஸ்டேட் ஸ்கூல் மிகவும் பின் தங்கிய ஸ்கூல்... நகரத்திற்கும் அந்த எஸ்டேட்டுக்கும் ஒருநாளைக்கு இரண்டே இரண்டு தடவை தான் பஸ் உண்டு, பஸ்ஸில் போவது பதினைந்துமைல். மீதி ஐந்துமைல் நடைபாதை. அங்கே போய் படித்துக்கொடுக்க தோட்டத்தில் பிறந்து வளர்ந்து படித்தவர்களே பின்வாங்கினார்கள். டவுண் ஸ்கூலில் 'டிப்டாப்'பாக உடுத்தி, மினுக்கி மாஸ்டர்வேலை செய்வதையே அவர்கள் விரும்பினார்கள். அதனால் அந்தஎஸ்டேட் ஸ்கூலை மூடப்போனார்கள். அதை மூடாமல் தடுத்தவன் அவன்தான் அவன் அங்கே போனபோது நம்ம ஸ்கூலுக்கு யாரோ புதுசா மாஸ்டர் வந்திருக்காராம்... அவர் யாரோ!' என்ற எண்ணத்துடன் அவனை பார்க்க வந்தவர்கள் ஏராளம். வந்திருப்பது 'சாகப்போற கெழடாத்தான் இருக்கும்' என்று நினைத்தவர்கள் அவனைப் பார்த்த



தும் முதல் பார்வையிலேயே அவனை நம்பினார்கள். மறுநாள் லயத்தைச் சுற்றி ஆடிக்கொண்டிருந்த பிள்ளைகள் எல்லாம் 'அரைத்துண்டு' சிலேட்டுடன் ஸ்கூலுக்கு வந்துவிட்டார்கள். ஓ எத்தனை விதமான பிள்ளைகள்!... தேயிலைச் செடிகளும் லயங்களும் தான் உலகமென்று நினைக்கின்றவர்களின் வாரிசுகள்! அவர்கள் படிக்க வருவதே வேடிக்கை சிலர் கால்சட்டை மட்டும் போட்டும் சிலர் கால்சட்டை போடாமல் முழங்காலுக்குக்கீழே தொங்கும் பெரியசட்டைக்குள் உடம்பை நுழைத்துக்கொண்டும் வருவார்கள். அவர்களில் யாரிடமும் படிக்கத் தேவையான எல்லாமே இருக்காது... அத்தனை பேரையும் அவன் தான் மேய்க்கவேண்டும்...

அவனுக்கு முன்னர் வேலை செய்த 'மாஸ்டர் மார்கள்' எப்போது பார்த்தாலும் 'படம்பார் பாடம் படி... ஒன்று, இரண்டு, மூண்று, நாலு, ஐந்து - ஏ. பி. சி. டி' போன்றதைத்தான் கோரஸ் பாட்டுப்பாடி மேய்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவன் என்று வந்தானோ, அன்று தொடக்கம் தான் அந்தப்பிள்ளைகள் படிக்க ஆரம்பித்தார்கள். ஒன்று, இரண்டு, மூன்று, என்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள் கூட்டிக் கழித்து, பெருக்கி, வகுக்க ஆரம்பித்தார்கள். A,B,C,D என்று 'இங்கிலீஸ்' பேசியவர்கள் 'I am a Boy, -- You are a Girl' என்று படிக்க ஆரம்பித்தார்கள்.

அவன் வந்தபோது இருபத்தைந்து பேர் அடங்கிய பிள்ளை மடுவமாக இருந்த அந்தஸ்கூல் நிஜமாகவே ஸ்கூலாக மாறியது... பிள்ளைகளின் தொகை மூன்று மடங்காகியது. ஸ்கூலைச் சுற்றி காய்கறித்தோட்டம் உண்டாகியது. விளையாட இடமும் பந்தும் கிடைத்தது. ஸ்கூல் சுவர்களில் மாட்ட படங்கள் கிடைத்தன.

''என்ன பேசாமஇருக்க, ஒரு முடிவை சொல்லு...'' என்று இழுத்தார் அவனுடைய அப்பா. அந்த இழுப்பைத் தொடுத்தாள் அம்மா...

''மத்தவங்க எல்லாம் இந்த ஸ்கூல் வேணம்னு போகுதுக. நீ என்னடான்னா இதை தான்னு வாங்கிபடிச்சி கொடுக்கிற...இங்கு மனுசன் வாழ்வானா? காட்டுத் தொங்கல்...இந்த வேலவேணாம்...

அவன் அப்போது அவர்களின் பேச்சை எண்ணிப்பார்த்தான்.



மனைவி; ஐயோ! வீட்டிற்குள் திருடன் புகுந்திட்டான்...

கணவன்; புதுமனைப் புகுவிழா இன்னும் முடியவில்லை... முடிந்தபின் வரச்சொல்...

—அதிமதுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இசையும் ஈரைந்து தலைகளும்

டைரக்டர்: இன்று இராவணன் இருந்திருந்தால்...!

மியூசிக் டைரக்டர்: கோரஸ்' பாடுவதற்கு பத்துப்பேரைத்தேடி அலையவேண்டியதில்லை.

—அதிமதுரம்

இன்று தோட்டத்தை வெறுக்கும் இவர்கள் ஆரம்பத்தில் கணக்கப்பிள்ளை குடும்பமாக தோட்டத்தில் இருந்தார்கள். இன்று டவுனில் வீட்டைக்கட்டி, டவுண் ஆட்களாக மாறி தோட்டத்தின் மீது வெறுப்பைக்கக்குகிருர்கள்... அவனுக்கு ஆத்திரம் வந்தது, அவர்கள் வேறுயாருமாக இருந்திருந்தால் வாய்க்குவாய் திட்டியிருப்பான். ஆனுல் அவர்கள் அவனைப் பெற்றவர்கள்...

அவன் பதிலே பேசவில்லை. அப்பாவும் அம்மாவும் திரும்பிப் போனுர்கள். அதன்பின் அம்மாவிடமிருந்து ஒருகடிதம் வந்தது. அவனும் அம்மாவைப் பார்க்கப் போனுன். போகும்போது, திரும்பிவந்து அந்த ஸ்கூலில் வேலை செய்வதென்ற முடிவோடுதான் போனுன். வரும்போது நீலநிற சூட்கேசில் எல்லாவற்றையும் திணிக்க முடிவுகட்டியிருந்தான்... அவனை அவனுடைய அம்மா மாற்றிவிட்டாள்... அவன்போனபோது அம்மா கட்டிலில் கிடந்தாள். அவனைக்கண்டதும் தோட்டத்து ஸ்கூலை விட்டுவிடும்படி கெஞ்சினுள்...

''ஒன்னோட படிச்சவன் தான் கனேஸ்!... இன்னைக்கி அவன் எல்லா வசதியோட இருக்கிருன் கார், பங்களா வாங்கிட்டான். நீயோ மாஸ்டர் வேல அதும் ஒரு தோட்டத்து ஸ்கூல் மாஸ்டர் வேல செய்யிற ஒனக்கு பெரிய இடத்தில பொண்ணு பார்த்தோம். அவங்க எஸ்டேட் ஸ்கூல் மாஸ்டர் வேல செய்யிறவங்களுக்கு பொண்ணு தரமுடியாதுன்னு சொல்லிட்டாங்க...'

அவன் மௌனமாக இருந்தான்.

கடைசியில் அவனுடைய அம்மா பாசக்கயிறைவீசி அவனை இழுத்தாள். எப்படியாவது அவனை எஸ்டேட் ஸ்கூலிருந்து இழுத்தெடுக்க வேண்டும் என்பதே அவளுடைய எண்ணம்.

''கடேசியா சொல்ரேன்! நீ யாருக்காக இல்லாட்டியும் எனக்காகவாவது இங்க வந்திரு! நான் சாக பொழைக்க இருக்கிரேன்...''

அவன் அப்போது தான் அம்மாவை உற்றுப் பார்த்தான். உண்மையிலேயே அவள் தளர்ந்துதான் போய்விட்டாள். முகம் வெளுத்து களை இழந்திருந்தது...

அவன் தான் ஸ்கூலைவிட்டு விலகப்போவதாக முதன்முதலில் தோட்டத்து தபால்காரனின் காதில் போட்டான். அவர் அதைக்கேட்டு பேயறைந்த போல் நின்ருர். வெகு நேரத்திற்குப்பின்னர் சுய நினைவு வந்த அவர் கண்கள் கலங்க சொன்னுர் ''நீங்க போனு ஸ்கூலை மூடவேண்டியது தான். யாருமே படிச்சி கொடுக்க வரமாட்டாங்க இனி இந்த பட்டாளம் தோட்டத்தையே சுத்தும்...''

தபால்காரனின் ஒவ்வொரு சொல்லும் நனைந்து நனைந்துதான் வெளியே வந்து விழுந்தது. அவனுல் பதில்சொல்ல முடியவில்லை. அந்த தபால்காரருக்கு தன் முடிவைச் சொல்லாமல் இருந்திருக்கலாம் அவன். ஆனுல் அந்தமுடிவு எப்படியோ தெரியத்தானே போகிறது!

தபால்காரர் தபால்பையோடு ஒருபக்கம் சரிந்து சரிந்து நடந்து போனுர். போகும்போது கெஞ்சும் குரலில், ''நல்லா ரோசண பண்ணி முடிவு எடுங்க மாஸ்டர்...'' என்று சொல்லிவிட்டு போனுர்.

அவன் யோசித்துப் பார்த்தான். வேறு எந்தமுடிவும் எடுக்க முடியாது. எடுத்த முடிவு சரியாகபட்டது அவனுக்கு...

தபால்காரர் போன சற்று நேரத்தில் அவனுடைய குவார்ட்டர்ஸின் முன்னே சின்னக் கூட்டமே கூடிவிட்டது, அவனுல் ஒன்றுமே செய்யமுடியவில்லை... அவர்களை நிமிர்ந்து கூடப்பார்க்க முடி

### நவீன பரதன்

ஒரு; என்ன பரதன் போத்தல்களை உடைத்துக் குவிக்கிறுய்?

பரதன்; பாகப்பிரிவினைக்கு எழுப்பியசுவருக்கு பதிப்பதற்கு போத்தலோடுகள் தேவையாக இருக்கு.

—ஜோக்கிரட்டீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிப்பு



- திரௌபதியின் சிரிப்பால் பாரதயுத்தம் உண்டானது.
- கிருஷ்ணரின்சிரிப்பால் குசேலர்வீட்டில் செல்வம்கொழித்தது
- சகுனியின் சிரிப்பால் பாண்டவர் பாஞ்சாலியை இழந்தனர்.
- மாதவியின் சிரிப்பால் கோவலன் கண்ணகியை மறந்தான்.
- பத்திரிகை ஆசிரியரின் சிரிப்பால் எழுத்தாளரின் கட்டுரை குப்பைக் கூடைக்குள் போனது.

—பாலு

யாமல் தவித்தான். அவர்கள் இப்படி திடீரென்று வருவார்கள் என்று அவன் நினைக்கவே இல்லை ஓ... அவன்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் அவர்கள்...! அவன் யார்? அவர்கள் யார்? இரண்டு பேரையும் இணைப்பது எது? அந்தப்பாசம்...

மெல்ல தலைதூக்கி அவர்களைப் பார்த்தான். அந்தக்கூட்டத்தில் தலைவர், கங்காணி, தபால்காரர், பூசாரி... இப்படி பலர்... அதில் ஒரு கிழவி இரண்டுகையை ஆகாயத்தை நோக்கி விரித்துக் காட்டிப் பேசினாள்... "மூடப்போன ஸ்கூல நீங்கதான் மூடாம காப்பாத்தினீங்க! நல்லா படிச்சி கொடுத்தீங்க... உங்க மாதிரி பொறுப்போட பாரத்தோட படிச்சி கொடுக்கிர மாஸ்டர்மாருக கெடைக்கனுமே! வர்ர மாஸ்டர் மாருக எல்லாம் கொஞ்சநாளைக்கி இருந்திட்டு அவனைபுடிச்சி இவனை புடிச்சி டவுண் ஸ்கூலுக்கு போயிருனுக... நீங்கதான் எங்கபுள்ளைகளுக்கு நல்லா படிச்சி கொடுத்தீங்க! இப்பபோறேனு சொல்றீங்களே..."

அந்தக்கிழவி ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள். அவளுக்கு பிறகு அடுத்தடுத்து பலர் பேசினார்கள். அவன் யோசித்து யோசித்துப் பார்த்தான்... கடைசியில் அவன் அப்பா வகுத்தவெளியிலே நின்றான்...

கட்டிலில் மல்லாந்து படுத்துக்கிடந்த அவனுக்கு தூக்கமே வரவில்லை. தூங்கவேண்டுமென்று தான் கட்டிலில் விழுந்தான், தூக்கம் வந்தால்தானே! பகலில் தூக்கம் வருமா என்ன!

கண்களை மெல்ல மூடினான் அவன். மூடிய கண்களின் இமைக்குள்ளே ஒருகாட்சி நெளிந்து... போனமாதம் ஸ்கூலில் சரஸவதி பூஜை லயத்தில் உள்ள அத்தனை பேரும் வந்திருந்தார்கள். மாணவ மாணவிகளின் நிகழ்ச்சிகள் நடந்தன. டவுனில் இருந்து வந்த ஒருதர் பேசினார். அவனும் பேசினான் கடைசியாக பூஜை நடந்தது. கடைகியாக அவன் நன்றி சொன்னான். அப்போது அவன் கழுத்தில் ஒரு இளைஞன் திடீரென்று மாலை போட்டான். அவன் போட்ட வேகத்திலேயே மாலையைக் கழட்டினான். அதன் பின்னர் அவன், தனக்கு மாலைபோட்டது தவறு மாலை இங்குள்ள ஒவ்வொருவருக்கும் போடவேண்டும் நான் என் கடமையைத்தான் செய்தேன். கடமையைச் செய்ததற்கு மாலை போடமாட்டார்கள் சம்பளம் கொடுப்பார்கள். இங்கே சம்பளம் கொடுக்கிறார்களே!... என்று சொல்லி கைதட்டல் வாங்கினான்.

அப்போது ஒருத்தர் சொன்னார்... "நாங்களாதான் ஒங்களுக்கு மாலை போட்டோம் மத்தவங்க மாதிரி மாலையை வாங்கி எங்களுக்கிட்ட குடுத்து போடச் சொல்லலியே!"

அங்கிருந்த அத்தனை பேரும் சிரித்தார்கள்...

கண்களை மெல்ல திறந்து பார்த்தான்... மேலே வீட்டுக் கூரை தான் தெரிந்தது. மீண்டும் கண்களை மூடினான், மறுபடியும் யோசனை...யோசனை...யோசனை.

அப்போது கதவைத்தட்டும் சத்தம் கேட்டது. யார் கதவைத் தட்டுகிறார்கள்? என்று நினைத்துக் கொண்டே அவன் கட்டிலைவிட்டு இறங்கிப்போனான். கதவைத் திறந்தான். தபால்காரர் அன்றைய பேப்பரும் கையுமாக நின்றார். அவர் முகத்தில் வெளிச்சம் இல்லை. இருட்டுதான் இருந்தது ஏன்?

அவன் தபால்காரரிடமிருந்து பேப்பரை வாங்கினான். நேற்றுப்

## சர்வதேசியம்

- உலகிலுள்ள மனிதர்கள் யாவரையும் இறைவன் ஒரே இரத்தத்தினாலேயே படைத்தான்.

—சென்றபோல்

- வானம் என்ற கூடாரத்தின் கீழ் மக்கள் எல்லோரும் ஒரே நாட்டினரே

—கன்பூசியஸ்

- உன்னை நீ யார் என்று கேட்டால் ஏதன்ஸ் நகரவாசியென்றோ கிரேக்கன் என்றோ சொல்லாதே. உலகப் பிரசையென்றே சொல்.

—சோக்கிரட்டீஸ்

போன பேப்பர் லயத்தைச்சுற்றி விட்டு இப்போதுதான் வந்திருக்கிறது...

அவன் தபால்காரரைப் பார்த்தான்...

''தம்பி! நீங்க போகத்தான் வேணுமா?...''

தபால்காரர் கேட்டார்... அவன் மௌனமாக நின்முன்...

''ஒங்கள நம்பிதான் இருக்கிரோம். ஏதோ யோசிச்சிசெய்ங்க.' என்று சொல்லிவிட்டு தபால்காரர் சரிந்து சரிந்து நடந்துபோனர் அவருடைய தோளில் தபால்பை இல்லை. ஆனல் அதை தோளில் சுமந்து நடந்து பழகியதால் சாதாரணமாக நடக்கும் போதும் தபால்பை சுமப்பது போன்ற பாவனையில்தான் நடப்பார்.

தபால்காரர் போய்விட்டார். அவன் கட்டிலில் விழுந்து ஒரு பக்கம் சரிந்து படுத்தான்... நூக்கம் வரவேயில்லை...

அடுத்தநாள்...

தன்னுடைய ராஜினமா கடிதத்தை எடுத்துக்கொண்டு அவன் துரையின் பங்களாவுக்குப் போனன் அது துரையின் தோட்டம்... முதலாளி துரை என்று இரட்டை வேடம் போடுவது இங்கே ஒருத்தர்தான்.

குறுக்குப்பாதையில் இறங்கினன் அவன். இரண்டு பக்கங்களும் தேயிலைச் செடிகள்...!அதில் பெண்கள் கொழுந்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். அவனைப் பார்த்து அவர்கள் ஏதோ பேசிக்கொண்டார்கள். அவன் தலை குனிந்தவாறு போய்க்கொண்டிருந்தான்.

குறுக்குப்பாதை கரத்தை ரோட்டோடு சங்கமிக்கும் இடம். அங்கே ஒரு மாமரம்... அந்தமரம் தன் கிளைகளைவிரித்து நிழல்பரப்பி பூவும் பிஞ்சுமாய் நின்றது, வாண்டுகள் கல்லும் தடியுமாய் அந்த மரத்துடன் போர் புரிந்துகொண்டிருந்தார்கள். அவர்களின் ஒவ்வொரு தாக்குதலுக்கும் மரம் பதில் தாக்குதல் தொடுக்காமல் அவர்களை ஆசிர்வதிப்பது போல் பூவையும் பிஞ்சையும் உதிர்த்தது



● இன்று சந்தோஷமாக நேரம் போச்சு!

□ ஏன் காதலனோடு பிக்னிக் போனியா?

● இல்லை கண்ணீர் கொட்டக் கொட்ட ஒருசோக நாவல் வாசித்து முடித்தேன்.

---

அவன் மாமரத்தின் அருகே போனன். அவனைக் கண்டதும் தங்களின் யுத்தத்தை நிறுத்திய வாண்டுகள் தங்களின் ஆயுதங்களை அதாவது கல்லையும், பொல்லையும் போட்டுவிட்டு ஓடினர்கள் அவனுக்கு ஆத்திரம் வந்தது. காயும் கனியுமாக பூத்துக் குலுங்க வேண்டிய பூவையும் பிஞ்சையும் அற்ப ஆசையால் உதிர்க்கிருர்களே! இவர்களை... ஒரு வாண்டுப் பயலை எட்டிப்பிடித்தான் அவன். அந்த வாண்டு அவனிடம் படிப்பவன்...ராக்கனின் மகன் கொஞ்ச நாட்களாகத்தான் திருந்தி படிக்க ஆரம்பீத்தான். அவன் மீண்டும் இப்போது ஆடத்தொடங்கிவிட்டான்...

''ஏன் மரத்த நாசமாக்கிறீங்க?''

வாண்டுப்பயலின்முதுகுதவித்துக் கொண்டிருந்தது. அவன் முதுகில் தான் அடிப்பான்...

''நாளைக்கி ஸ்கூலுக்கு வாங்க கவனிச்சிக்கிறேன்...'' அவனுக்கு வாய்தவறியது. அவன்தான் நாளை மாஸ்டராக இருக்கமாட்டானே!

அவன் தன்னை சமாளித்துக் கொண்டு, ''சரி... சரி... பேயிபடிங்க... மரத்தில காய் காய்க்கட்டும்... அவசரப்பட்டு பூவையும் பிஞ்சையும் நாசமாக்காதிங்க!...'' என்று சொல்லிவிட்டு வாண்டுப்பயலை ஓடவிட்டான்.

துள்ளி ஓடிய வாண்டுப்பயல் சற்று தூரப்போய், ''இனி எங்க சேர் படிப்பு? நீங்க ஸ்கூலைவிட்டு போறீங்களாம், அதனல் என்னை ஆயா இனி படிக்கபோகாதேன்னு சொல்லிச்சி! இனி ஆட்டுக்கு எலை குழை வெட்டணும்! வெறகு பொறுக்கனும்!...''

அவன் அப்படியே நின்முன் அவனுடைய கால்கள் நடுங்கின. நேற்றுவரை படித்தவர்கள் நாளை முதல் படிக்க மாட்டார்களாம்... ஏன்? அவன்தான் அதற்கு காரணம்... அவன் இருக்கும்வரை படித்தவர்கள் அவன் போகப் போகிருன் என்பதைக் கேட்டு மாறுகிருர்கள். மீண்டும் இனி அந்த வாண்டுகள் லயத்தைச்சுற்றி விளையாடுவார்கள்...

அவன் மரத்தைப் பார்த்தான். மரத்தின் கீழே பூவும்பிஞ் சிதறிக்கிடந்தன. காய் காய்ப்பதற்கு முன்னரே வாண்டுகள் அவசரப்பட்டு விட்டார்கள். இன்னும் கொஞ்சம் நாட்கள் விட்டிருந்தால் சிதறிக்கிடக்கின்ற பூவும் பிஞ்சும் காய்த்து தொங்குமே... ஆனல்... ஆனல்...

அவன் திடீரென்று முடிவெடுத்தான். கையிலிருந்த கடிதத்தை கிழித்துப்போட்டான். அதுபல துண்டுகளாக சிதறிப் பறந்தன.

''நான் ஸ்கூலைவிட்டு போகல்ல... மாஸ்டரா இருப்பேன்... போயி ஆயாகிட்ட சொல்லுங்க''

வாண்டுகள் துள்ளிக் குதித்துக்கொண்டு லயங்களை நோக்கி ஓடினர்கள். அவன் திரும்பி நடந்தான்...

மாமரம் ஆடி அசைந்து கொண்டிருந்தது. அப்போதெல்லாம் மரத்தில் உள்ள பூவும் பிஞ்சும் ஆடின. ஓ...அவைகள் தான் இனி மேல் காயாக... கனியாக...

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அகளங்கன்**

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன'' என்பார்கள் ஆஸ்திகர்கள். ''இல்லை! இல்லை! சொந்த விருப்பத்தின் பேரில்தான் திருமணங்கள் நிச்சயிக்கப் படுகின்றன'' என்பார்கள் நாஸ்திகர்கள். திருமணங்கள் எந்தவகையில் நடந்தேறினாலும் குடும்ப வாழ்க்கைபற்றி இருசாராருமே சிலபொதுவான கருத்துக்களை வைத்திருக்கின்றனர்.

''அறஞ்செய்ய விரும்பு'' என்று கூறிய ஒளவையார் ''இல்லறம் அல்லது நல்லறம் அன்று'' என்கிறார் இல்லற வாழ்க்கையை நல்ல முறையில் வாழ்வதுதான் மேலான அறம். அதைவிட மேலான அறம் இல்லை என்பது அவரது கருத்து. அந்த இல்லறத்தை நல்லறமாக்குவதும் இல்லாமற்செய்வதும் மனையாளின் மாண்பிலேயே பெரிதும் தங்கியிருக்கின்றது. மனைவி மனைமாட்சி இல்லாதவளாய் இருந்துவிட்டால் அந்தக் குடும்பம் எத்தகைய மாட்சிமைப் பட்டதாக இருந்தாலும் மாட்சிமையுடையதாக ஆகாது என்கிறார் வள்ளுவர்.

மனைவி குண நலன்களில் செய்கைகளில் ஒழுங்கற்றவளாக இருந்து விட்டால் கணவன் தெருவிலே தலைநிமிர்ந்து நடமாடவே முடியாது. இதனால் தமிழரின் குடும்ப வாழ்விலே பெண்கள் பெரும்மதிப்போடு போற்றப்படுகிறார்கள். தமிழ்க் கலாச்சாரத்தைப் பொறுத்தவரையில் ஒருநல்ல மனைவிக்கு இருக்கவேண்டிய குண நலன்கள் பற்றி அளவுக்கு அதிகமாகவே சொல்லிவைக்கப் பட்டிருக்கின்றது.

நல்ல மனைவியின் குண நலன்கள் பற்றி 'வெற்றி வேற்கை' என்ற நீதி நூலில் அதிவீரராம பாண்டிய மன்னன் ''குலமகட் கழகு கொழுநனைப் பேணுதல்'' என்று கூறுகிறார். நல்ல குடும்பப் பெண்ணுக்கு அழகு என்று சொல்லப்படுவது தனது கணவனைப் பேணுதல் என்கிறார். கணவனை மனைவி பேணுவதில் முக்கியமான இரண்டு காரியங்கள் இருக்கின்றன.

மனைவியிடம் கணவன் காணும் முக்கியமான இரண்டு சுவைகளில் ஒன்று கட்டில் மற்றது வட்டில் வீட்டைவிட்டு வெளியே செல்லும் கணவன் இந்த இரண்டு சுகங்களையும் மனைவியைவிட வேறுஎந்த இடத்திலும் சிறப்பாகப்பெற முடியாத அளவுக்கு மனைவி கணவனுக்கு வழங்கவேண்டும். இதில் கட்டில் சுகம் இளமை உணர்வோடு மறைந்து விடுவது ஆனால் வட்டில் சுகமோ வாழ்க்கை முடியும் வரை தொடர்வது

எனவே வட்டில் சுகமென நான் குறிப்பிடும் உணவுச்சுகம் பற்றி இங்கு பார்ப்போம். சாப்பாட்டுவேளை வந்தால், எத்தனை தூரத்திலுள்ள கணவனும் வீட்டைத் தேடிவரக் கூடியதாக மனைவியின் சமையல் சிறப்பாக அமையவேண்டும். கணவனைக் கவர்ந்திழுத்து இல்லறத்தை நல்லறமாக்க பெரிதும் உதவுவது மனைவியின் சமையலும் உணவு பரிமாறும் தன்மையுமே.

இந்தச் சிறப்பான தன்மையை காவியங்கள் பலவற்றில் நான் காணவில்லை. ஆனால் தனிப்பாடல்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. குறுந்தொகை என்ற நூலில்வரும் பாடல் ஒன்றில், கணவனுக்கு தன்கையால் 'புளிச்சாதம்' சமைத்து அன்போடு பரிமாறும் பாவை கணவன் ''இனிது இனிது'' என்று மகிழ்ந்து உண வருந்துவதைப் பார்த்துப் பூரிப்படையும் செய்தி ஒன்று உள்ளது...

தான் துழந்து அட்ட தீம்புளிப்பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

என்பது அப்பாடலின் இறுதிவரிகள், தான் கஷ்டப்பட்டு சமைத்த புளிப்பாகரை கணவன் இனிது என்று கூறி உண்பதைக் கண்ட மனைவி மகிழ்ச்சியடைகின்றாள்

இதேபோல் வள்ளுவரும், தனது மனைவியின் இழப்புக்கு இரங்கும்போது ''அடிசிற்கு இனியாளே'' என்றே தொடங்குகின்றார். மிகவும் சுவையாக உணவு சமைத்துப் பரிமாறுபவள் அவரது மனைவி வாசுகி. அதனால் அவளை நினைக்கும் போது அன்புடைமை, சொற்படி தவறாத தன்மை, அடிவருடிப் பின்தூங்கி முன்னெழும்பும் சிறப்பு, எல்லாவற்றையும் விட அடிசிற்கு இனியவள் என்ற தன்மையே பெரிதாகத் தென்படுகிறது அவருக்கு.

அடிசிற் கினியாளே அன்புடைய மாதே
படிசொற் தவறாத பாவய் — அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழும்பும் பேதையே போதியோ
என்தூங்கும் என்கண் இரா.

தமிழ்க்கடவுள் முருகன் ஒளவையிடம் கொடியது என்ன




□ அதுவா? மாப்பிள்ளை பஸ்ஸில் தினமும் மிதிபலகையில் நின்றுகொண்டு பிரயாணம் செய்து பழகிப் போய்விட்டதாம்,

ச. ரா. பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுகேட்க ஒளவையாரும் ''கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்...'' எனத்தொடங்கிப்பாடுகிறார் வறுமை கொடிது எனக்கூறி, அதனினும் கொடிது இளமையில் வறுமை, அதனிலும் கொடிது தாங்கமுடியாத கொடுநோய் எனக்கூறி அதைவிட அன்பில்லாத பெண்டிர் கொடியது என்கிறார். இந்த வரிசையில் அன்பில்லாத மனையாளிலும் கொடியது அவர்கையால் உண்பது தானே என்று முடிக்கிறார். அன்பில்லாத மனையாளிலும் கொடியது அவர்கையால் உண்பது எனக்கூறி உணவு சமைத்துப் பரிமாறுதலுக்கு முக்கியத்துவம் அளிக்கிறார்.

இக்கருத்தை மிகவும் எளிய நடையில் கவிஞர் கண்ணதாசன் கூறுகிறார். ''பாலும் பழமும் கைகளி லேந்தி...'' என்றபாடலில் ''உண்ணும் அழகைப்பார்த் திருப்பாயே'' என்று தெளிவாகக் கூறுகிறார். கணவன் உண்ணும் அழகை மனைவி பார்த்துப் பரவசமடைய அதைப் பார்த்து கணவன் மகிழ. அதுஒரு பூலோக சொர்க்கமாகக் காட்சியளிக்கும்.

மனைவிக்கு முதற் குழந்தை கணவன் என்பார்கள் குழந்தை பாலருந்துவதைப் பார்த்து தாய் மகிழ்ச்சியடைவதுபோல கணவன் உண்ணும் அழகைப்பார்த்து மனைவி மகிழ்ச்சியடைவதுதான் நல்ல குடும்பப்பெண்ணுக்கு அழகு இன்று கலி முற்றி மனைவி உணவுசமைத்தலும், பரிமாறுதலும்கூட குறைந்து வருகின்றது. இதனால்தான் பலகுடும்பங்களில் கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் குறைந்து அன்பு அருகி வருகிறது. குடும்பம் சிறக்க கொண்டவனைப் பேணும் தன்மை பெருகவேண்டும் அப்போதுதான் இல்லறம் நல்லறமாகும்.

---

நாம் வர்மமாக வைத்துக்கொண்டால் அந்த ரோஜா மலர்களின் கதி என்னவாகும்.

நல்முத்துக்களில் துர்வாடை வீசுவதில்லை. ஆனால் ஆனால் அந்த முத்துக்களை ஈன்றெடுக்கும் சிப்பியிலோ தாங்க முடியாத துர்வாடை வீசுகிறது. மேலும் குமுத மலரிலும், செந்தாமரைப் பூவிலும், சுகந்தமணம் ஆனாலும் அந்த மலர்களை ஈன்ற சேற்றிலோ! கிட்டே நெருங்க முடியாத துர்வாடை வீசுகிறது.

எனவே, உயிரோட்டமும், ஜீவனுமுள்ள ஒரு ''ஆர்த்மார்த்த'' கலைஞனின் அந்தரங்கமும் அப்படித்தான் இருக்கும், என்ற தத்துவத்தை நம்மைப்போல் மற்றவர்களும், உணரவேண்டும், அல்லது புரியவைக்க வேண்டும் என்ற லட்சியத்தோடு நாம் எழுதவில்லை, பாடவில்லை, நடிக்கவில்லை.

சிப்பியைப்போல், சேற்றைப்போல்.

எங்களின் ஆத்மா, இருதயம், மனம் ஆகிய உள்ளுணர்வுகளில் ஏதோ ஒரு 'சக்தி' புதைந்திருக்கிறது. அல்லது ஒளித்துக் கொண்டிருக்கின்றது.

அவ்வளவுதான்.

# சிப்பியும் முத்தும்

உடல் நலமில்லாமல் பதுளை பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறேன். ஆத்மா இருதயம் மனம் ஆகியவற்றின் துண்டுதலால் ஒருசிறிய கட்டுரை எழுதியனுப்பியுள்ளேன்.

அன்பன்

**லடிஸ் வீரமணி**

எங்களைச் சிலர் 'கூத்தாடிகள்' என்று சொல்வார்கள். அவர்களை நாங்கள் மண்டைக்கனம் பிடித்தவர்கள், மமதை கொண்டவர்கள், என்று எண்ணுவதில்லை,

மற்றும் சிலர்... எங்களைக் 'கலைஞர்கள்' என்று சொல்லுவார்கள். அவர்களை நாங்கள் எங்களின் உண்மையான நண்பர்கள் என்று நினைத்துக் கொள்வோம்.

வேறு சிலர்... எங்களைப் பார்த்துக் ''குடிஞர்கள்'' மிகவும் ஏளனமாகக் கூறுவார்கள். அவர்களை நாங்கள் எங்களின் உண்மையான நண்பர்களாகவும், எங்கள் மீது பற்றும், பாசமும், கருணையும் உள்ளவர்கள் என்று கருத்தில் கொள்வோம், என்றாலும் குடிஞர்கள் எல்லாரும் கலைஞர்களாவதுமில்லை, கலைஞர்கள் எல்லாரும் குடிஞர்களாவதுமில்லை.

ஒரு மனிதனின், ஆத்மா, இருதயம், மனம், இவைகளின் உள்ளுணர்வுகள், பழக்க வழக்க தோஷங்களாலும், சுற்றம், சூழல், நட்பு இவைகளின் காரணமாவும் கெட்டுப்போகிறது. அல்லது மலுங்கிப்போகிறது. என்பது உண்மையான, சத்திய தரிசனமாகும்.

இவைகளை யெல்லாம், எங்களின் 'தலை' என்னும் பானையில் போட்டு 'எண்ணம்' என்னும் மத்தினால் கடைந்து, கடைந்து அதில் கிடைக்கும் 'வெண்ணெய்' யைத்தான் கலையாக சமைத்து மக்களுக்குப் படைக்கின்றோம் அது.

எழுத்து ஆகவோ! பாடலாகவோ, ஓவியமாகவோ சிற்பமாகவோ, இவைகளை யெல்லாம் உள்ளடக்கிய நாடகமாகவோ, நடிப்பாகவோ அவரவர் கற்பனை வளத்திற்கேற்ற வகையில், உருவகமெடுக்கின்றது என்ற ''ராஜ ரகசியத்தையும் நாங்கள் புரியாதவர்கள் அல்ல. போகட்டும்...

வசந்த காலத்தின் இளந்தென்றலிலே தங்களின் சின்னஞ்சிறு மேனியை மெல்ல அசைத்து ஆடும் அந்த ரோஜா மலர்களை ரசிக்கிறோம். அதன் மிருதுவான தன்மையை உணருகிறோம். ஆனாலும், அந்த ரோஜாச் செடியின் அங்கம் முழுவதும் கொடிய விஷமுட்கள் நிறைந்திருக்கின்றன என்பதை நாம் உணர்ந்தால்? அல்லது... அந்த முட்கள் நமக்கு விளைவிக்கும் தீமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ‘அசலும் நசலும்’

உங்கள் கவனத்திற்கு,

**மில்க்வைற் நீல சோப்பைப்**

போல வேறு போலித்தயாரிப்புகள்
உலாவுகின்றன.

இவை

**மில்க்வைற் நீல சோப்**

மேலுறையின் எழுத்துக்களின் அளவு
அமைப்புப் போலவே
அசல் மில்க்வைற் நீலசோப்பைப்
போல காட்சி தருகின்றது.
நீங்கள் வாங்கும் போது

**மில்க்வைற் நீலசோப்பில்**

**V. M. K**

பொறிக்கப்பட்டிருக்கிறதா என கவனித்து
வாங்குங்கள்.
மேலுறைகளை அனுப்பி சிறந்த பரிசுகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

## மில்க்வைற் யாழ்ப்பாணம்

த. பெ. இல 77 தொலைபேசி: 7233

அதிக சுவைக்கு அண்ணா கோப்பியே!
அண்ணா கோப்பிக்கு நிகர்
அண்ணா கோப்பியே!!

## அண்ணா கோப்பி
## தொழிலகம்.

இணுவில். தொலைபேசி: 7412

## சிற்றி பேனிச்சர்

- கலைத்துவமான
- நிலையான உறுதிமிக்க
- விலையில் நேர்த்தியான

கவினுறு தளபாடங்களின்
மனங்கவர் தேர்வுக்கு

உங்கள் இல்லம்
பளிங்கு மாளிகையாகத் திகழ

உங்கள் தேவைகளை
திருப்தியுடன் பெற...

## சிற்றி பேணிச்சர்

- கஸ்தூரியார் வீதி
- யாழ்ப்பாணம்.

## தொழில் பெருக
## வளம் குவியும்...

வளம் தரும் தொழிலுயர
வழிகாண விழைகின்றீர்களா?

- கைத்தொழில்களை ஆரம்பிக்க
- அவற்றை நிர்வாகம் செய்ய
- விஸ்தரிக்க

எந்திரவியல் பொறியியலாளரின்
ஆக்க பூர்வமான ஆலோசனைகளைப் பெற
தொடர்பு கொள்ளுங்கள்

எந்திரவியல் பொறியியலாளர்.
மே/பா சிரித்திரன்
559, கே. கே. எஸ் வீதி;
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் பொழுது



தனது தனித்துவமான ஆற்றலை முறைப்படி விருத்தி செய்து நாதஸ்வர வாத்தியமூலம் நாதவினோதம் புரிந்து இசையுலகில் இன்று முன்னணிக் கலைஞராக விளங்கும் நாதஸ்வரமேதை அளவெட்டி என். கே, பத்மநாதன் அவர்களை அண்மையில் எமது இந்த செவ்வித்தொடர் நிகழ்ச்சிக்காகச் செவ்வி கண்டோம். அவர் எமக்களித்த செவ்வி இங்கே இடம்பெறுகிறது.

கே; உங்கள் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் கூற முடியுமா?

ப; எனது சொந்த ஊர் அளவெட்டி, ஆரம்பக்கல்வியை அளவெட்டி ஞானோதயாக் கல்லூரியில் கற்றபின் நாதஸ்வரக்கலையை எனது தகப்பனாரிடம் கற்றேன். எமது குடும்பம் பரம்பரை பரம்பரையாக இத்துறையில்தான் ஈடுபட்டு வருகிறது. எனது வாழ்க்கைத் தொழிலாக இதையே செய்து வருகிறேன்.

கே: இன்று இந்தியாவில் பிரபலமான நாதஸ்வர வித்துவான்கள் யார்? நீங்கள் எவரை மேலாக மதிக்கிறீர்கள்?

ப; இன்று இந்தியாவில் பிரபலமான நாதஸ்வரவித்துவான்கள் எனும்போது ஷேக் சின்ன மௌலானா, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் முதலானோரைக் குறிப்பிடலாம். பிரபல்யமான வித்துவான்கள் எனும்போது ஒவ்வொருவரும் ஒவ்வொருவகையில் நாயனம் பிடிப்பதில் வல்லவர்களாக விருக்கிறார்கள். வாசிப்பவர்களுடைய சந்தர்ப்பம், சூழ்நிலைகள் (Mood) நன்றாக விருந்தால் அவர்களது வாசிப்பும் நன்றாகவிருக்கும். என்னைப் பொறுத்தவரையில் காலஞ்சென்ற நாதஸ்வரமேதை திருவாவடுதுறை இராஜரட்ணம்பிள்ளை கையாண்டதுபோல் யாரும் எந்தவொரு ராகத்தையும் கையாளவில்லை என்றே கூறுவேன்.

கே: தெய்வ சந்நிதானத்தில் அர்ப்பணிக்க வேண்டிய தெய்வீகக் கலையான நாதஸ்வரத்தை பொது வைபவங்களில் பயன்படுத்தலாமா?

ப: மங்கள இசையான நாதஸ்வர இசையை மங்களகரமான வைபவங்களில் பயன் படுத்துவதில் தவறில்லை.

கே: நாதஸ்வரத்திலும் பார்க்க தவிலையே மக்கள் கூடுதலாக விரும்புகிறார்கள் என்ற கருத்து முன்னர் கூறப்பட்டது. இதைப்பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப: நாதஸ்வரம் என்றால் என்ன, தவில் என்றால் என்ன கையாள்பவர் திறமையாகக் கையாண்டால் மக்கள் நிச்சயமாக விரும்பி ரசிப்பார்கள். இந்த இரண்டு வாத்தியங்களையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்துக் கூறமுடியாது. இந்த இரண்டு வாத்தியங்களும் ஒன்றுக்கொன்று குறைந்தவையுமல்ல.

கே: உங்களது வாழ்வில் நீங்கள் திறமையாக வாசித்துப் பாராட்டைப் பெற்ற சம்பவம் எது?

ப; 1968ல் மெட்ராசில் மியூசிக் அக்கடமியில் வாசித்துப் பாராட்டைப் பெற்றது முக்கியமான சம்பவமாகும். ஏனெனில் மியூசிக் அக்கடமியில் இலகுவில் இடம் கொடுக்க மாட்டார்கள்.

கே: தவில், நாதஸ்வர வாத்தியங்களைக் கற்பிக்கவென இலங்கையிலோ அல்லது தமிழகத்திலோ ஏதாவது கல்வி நிறுவனங்கள் இருக்கின்றனவா?

ப: இந்தியாவில் தவில், நாதஸ்வரம் முதலிய வாத்தியங்களைக் கற்றுக்கொள்ள தனிப்பாடசாலைகள் கூட இருக்கின்றன. இப்படிப்பட்டதொரு பாடசாலையில் கல்விகற்ற திருப்பாபுரம் பரம்பரையைச் சேர்ந்த இரண்டு சிறுவர்கள் வெகு அற்புதமாக வாசிக்கிறார்கள். இவர்களது வயது ஒருவருக்கு 13 மற்றவருக்கு 15. ஆனால் நன்கு அனுபவப்பட்ட முதிய நாதஸ்வரக் கலைஞர்களைப்போல் வாசிக்கிறார்கள். இவர்களது திறமையை அறிந்த தமிழக முதல்வர் அண்மையில் நேரில் அவர்களைக்கண்டு பாராட்டினார். நாதஸ்வரம், தவில் போன்ற வாத்தியங்களைக் கற்கவென தனியான கல்வி நிறுவனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் இலங்கையில் இருக்குமானுல் நாமும் இவர்களைப் போன்ற கலைஞர்களை உருவாக்கலாம்.

கே: திரு. இராஜரட்ணம்பிள்ளை அவர்கள் இசைவிற்பன்னர்களுக்கும் இசைஞானிகளுக்குமென ஒரு குறிப்பிட்ட வட்டத்தினர்க்கே வாசித்தார் எனவும் காரைக்குறிச்சி அருணுசலம் அவர்களோ மக்களுக்காக வாசித்தார் எனவும் இதனுல் இராஜரட்ணம் பிள்ளையின் வாசிப்பு ஜனரஞ்சகமாக அமையவில்லை எனவும் சிலர் குறிப்பிடுகிருர்களே! இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப; காரைக்குறிச்சி அருணுசலம் அவர்கள் ஜனரஞ்சகமாக மக்கள் விரும்பும் மெட்டில் வாசித்துப் புகழ் பெற்ருர் என்பது உண்மைதான். மக்கள் விருப்பத்திற்கேற்ப வாசித்தார். ஆனுல் திரு. இராஜரட்ணம் பிள்ளை அவர்கள் தனது மெட்டுக்களை மக்கள் விரும்பவில்லையே என்பதற்காக அவர் தனது வாசிப்பில் மாற்றங்களை மேற்கொள்ளவில்லை. தனது வாசிப்பை அவர் உயர்ந்த தரத்தில் வைத்துக்கொண்டார். அதனுல்தான் அவர்போல் இப்போதுகூட யாராலுமே வாசிக்க முடியாதுள்ளது. இந்த வகையில் தான் திரு. இராஜரட்ணம்பிள்ளை அவர்கள் முதல் தரமான நாதஸ்வரக்கலைஞராக மிளிர்கிருர். அவர் ஒரு இசைஞானி. இசைச்சக்கரவர்த்தி என்றே கூறுவேன்.

கே; சிலர் நாதஸ்வரக்கச்சேரிகளில் தவிலுக்குப் பதிலாக மிருதங்கத்தைப் பாவித்ததாகக் கூறப்படுகிறது. இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: ஒரு மாற்றத்திற்காக அப்படிச் செய்திருக்கக்கூடும் ஆனுல் மிருதங்கத்திலிருந்து எழும்ஓசை தவில்ஓசையைப்போல் நாதஸ்வர இசைக்கேற்ப கம்பீரமாக அமையாது. இதனுல் கச்சேரி முழுமைபெருது. ஆனுல்என்னைப் பொறுத்தவரை நாதஸ்வரத்திற்கு தவில்தான். தவிலுக்கு நாதஸ்வரம்தான். இதில் இரண்டுபட்ட கருத்துக்கே இடமில்லை.

கே; நீங்கள் இசைத்துறையில் யாரால் பூரணமாகநெறிப்படுத்தப் பட்டீர்கள் எனக்கூற முடியுமா?

ப: எனதுகுரு சீர்காழி S. P. M. திருநாவுக்கரசுப்பிள்ளை அவர்களும் திருச்சபை கிருஷ்ணபிள்ளை அவர்களும் நெறிப்படுத்திஞர்கள்.

கே: ஈழத்தில் பொதுவாக இசைத்துறை வளர்ச்சி பெற்றுள்ளதா?

ப: பொதுப்படையாக இசைத்துறை வளர்ச்சிபெற்று வருகிறது எனக் குறிப்பிடலாம்.

கே: வடநாட்டில் பிரபல்யமாக விளங்கும் ஷெஞய் வாத்தியத்திற்கும் - தென்ஞட்டில் பிரபல்யமாக விளங்கும் நாதஸ்வரத்திற்கும் இடையில்எத்தகைய இனிமையைக் காண்கிறீர்கள்?

ப; ஷெஞய் வாத்தியம் வடநாட்டிற்குப் பொருத்தமாகவுள்ளது. ஷெஞய் வாத்தியக்கலைஞர்களை இதுவரை எந்த மேல்நாடும் அழைத்து கௌரவிக்கவில்லை. நாதஸ்வரம் மேலைநாடுகளில் கௌரவிக்கப்பட்டதுபோல் கீழைநாட்டு வாத்தியங்கள் எதுவும் மேலைநாட்டில் கௌரவிக்கப்படவில்லை. இதுஒன்றே இக்கேள்விக்குத்தக்க பதிலாகஅமையும் எனஎண்ணுகிறேன்.

கே: புதிதாக இத்துறையில் இறங்கும் ஒரு கலைஞனுக்கு இத்துறையில் அவன் வளர்ச்சி பெற அவனுக்கு நீங்கள் கூறக்கூடிய ஆலோசனைகள் என்ன?

ப: நாதஸ்வரத்தைப் பொறுத்தவரை கலைஞான சக்தியும் அதிஷ்டமும் இருந்தால்தான் நாதஸ்வரக்கலையில் சிறப்படைய முடியும். உடற்பலம் அவசியம் உடற்பலத்தின் கட்டுக்கோப்புத் தளராமல் இருக்க கலைஞன் ஒழுக்கமுள்ளவனுக இருக்க வேண்டும். புகழேணியில் ஏறிக்கொண்டு செல்லும்போது பல தர்மசங்கடமான சந்தர்ப்பங்களை எதிர்நோக்க வேண்டிவரும். அத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் விழிப்பாக இருக்கவேண்டும். ஒவ்வொரு மேடையையும் ஒவ்வொரு பரிசோதனைக்களமாகக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

கே: உங்களுக்கு முன்பு இலங்கையில் இருந்த பிரபல்யமான நாதஸ்வர வித்துவான்கள் யார்?

ப: எனக்கு முன்பிருந்த பிரபல நாதஸ்வர வித்துவான்கள் முருகையாபிள்ளை, அப்புலிங்கம்பிள்ளை, மாவிட்டபுரம் ராஜா முதலானேரைக் குறிப்பிடலாம். முருகையாபிள்ளை இப்போது உயிருடன் இல்லை.

கே: பரதநாட்டியத்திற்குப் பக்கவாத்தியமாக நாதஸ்வரத்தை உபயோகிப்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: நாதஸ்வரத்திற்கு தவிலுக்குப்பதிலாக மிருதங்கம் உபயோகிக்கப்பட்டதுபோல் பரதநாட்டியத்திற்கு நாதஸ்வரத்தை ஒரு மாற்றத்திற்குச் செய்துபார்த்தார்கள். அது சிறப்பாக அமைந்துவிட்டது. இதனுல் இப்போது செய்து வருகிருர்கள்.

கே: ஒலிப்பதிவு நாடாக்களில் நாதஸ்வரத்தை பதிவு செய்யும்முறை இப்போது எல்லா இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தநிலை உங்களைப் பொருளாதார ரீதியாகப் பாதித்துள்ளதா?

ப: ஒலிப்பதிவு நாடா முறையால் பாதிப்பில்லை எனக் கூறமுடியாது. கெட்டிமேளம் கொட்டி தாலிகட்ட வேண்டிய திருமண வைபவங்களில் கூட ஒலிப்பதிவு நாடாவையே பயன்படுத்துகிருர்கள். இதனுல் எமக்குப் பொருளாதார ரீதியாகப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனுல் இதையிட்டு ஒன்றும் செய்யமுடியாதுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: நீங்கள் எந்தெந்த வெளிநாடுகளுக்குச் சென்று கச்சேரி செய்திருக்கிறீர்கள்?

ப: இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, லண்டன், பாரிஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளேன்.

கே: அண்மையில் நீங்கள் மேற்கத்தேய நாடுகளுக்கு விஜயம் செய்தீர்கள். அங்கு நாதஸ்வரக்கலைக்கு மதிப்பு எப்படியிருக்கிறது?

ப: மேலைநாட்டில் நாதஸ்வரத்திற்கு நல்லமதிப்பு இருக்கிறது. நான் தொலைக்காட்சியில் கச்சேரி செய்தேன், பி. பி. சி தமிழோசையில் பேட்டிகொடுத்தேன். பிரிட்டனில் பலமண்டபங்களில் கச்சேரி செய்தேன். லண்டன் முரசுக்குப் பேட்டிகொடுத்தேன். பாரிசில் ஒரு கச்சேரி செய்தேன்.

கே: இக்கலையைப் பொறுத்தவரை வெளிநாட்டவர்களுடைய இரசிகத்தன்மை எப்படியிருக்கிறது?

ப: லண்டனுக்கு இதுவரை நாதஸ்வரக் கலைஞர்கள் வரவில்லை என்று சொன்னார்கள். நான்தான் முதல் முதல் வந்திருப்பதாகக் கூறினார்கள். மேலைத்தேய சங்கீதம் புகழ்பெற்ற அந்தநாடுகளில் கர்நாடக சங்கீதம் பற்றிய அறிவு குறைவேயாகும். அப்படியிருந்தும் பல ஆங்கிலேயர்கள் கேட்டுக்கொண்டபடி அவர்களது மேலைத்தேய சங்கீத மெட்டுக்களில் சிலவற்றை நாதஸ்வரத்தில் வாசித்துக்காட்டினேன் மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

கே: இசைப்பிரியர்களுக்கு எமது சஞ்சிகை மூலம் நீங்கள் கூறவிரும்புவது என்ன?

ப: இசைத்துறையில் ஈடுபடும் கலைஞர்களின் பிற்கால வாழ்வுக்குப் பாதுகாப்புத்தேவை. ஓய்வுகால ஊதியம் தேவை. ஆகவே இதற்கென ஒரு நிதியம் தேவை. அவ்வாறாக ஒரு அமைப்பு உருவாக்கப்படுமானால், அந்த அமைப்பு இத்தொழிலுக்கு அளிக்கப்படும் கௌரவமாகவும் அமையும், மேலும் இக்கலையைக் கற்கக்கூடிய வகையில் இராமநாதன் நுண்கலைப் பீடத்திலாவது தனியானதொருதுறை ஏற்படுத்தித்தர வேண்டும்.

அடுத்ததாக ஆலயங்களில் திரைப்படப்பாடல்களைத்தான் நாதஸ்வரத்தில் வாசிக்க வேண்டும் என்றநிலை ஏற்படமக்கள் இடம்கொடுக்கக்கூடாது. நாதஸ்வரத்தின் புனிதத்தன்மை பேணப்படவேண்டும். இறையுணர்வோடு ஆலயம் வரும் மக்களுக்கு நாதஸ்வரத்தின் மூலம் சினிமாப்பாடல்களை வாசிக்கும்போது அந்த இசையுணர்வை நீக்கி இழிவான உணர்வுகளையே ஊட்டுகிறது. இதற்கு இடமளிக்கக் கூடாது. கர்நாடக இசை நிலையான பொருளாகையால் அதன் மூலம் உருவாகும் உணர்வுகளின் புனிதத்தன்மையும் பேணப்படவேண்டும். இவையே என் வேண்டுகோள்களாகும்.

நன்றி வணக்கம்.

செவ்வி கண்டவர்கள்:

**பொன். பூலோகசிங்கம்**

**கனக. சுகுமார்**

---

# ரசப்பொடி

- ஜனக் ஜனக் பாயல் பாஜே, நவ்ரங், ஸ்திரீ, தோ ஆன்கன் பாரேஹாத் ஆகிய அற்புதமான படங்களை தயாரித்து நடித்து நெறிப்படுத்திய பிரபல டைரக்டர் V. சாந்தாரம் பற்றி 2 மணிநேர மராத்தி திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. பெயர் 'சித்ரபதி'

- 51 வயதாகும் லதா மங்கேஸ்கர் இதுவரை அனைத்திந்திய மொழிகளிலும் சுமார் 30 ஆயிரம் பாடல்களைப் பாடியுள்ளார் இவர் சிங்கள மொழியிலும் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

- ஹொலிவுட் நடிகர் ஜோன் வெயின் ஒரு உலக சாதனை புரிந்திருக்கிறார். ஆம் அவர் 50 வருடங்களில் 200 தடவை திருமணம் செய்திருக்கிறார்.

- பிரபல நடிகர் ரஞ்சன் இப்போது ஹிந்திப்படங்களுக்கு திரைக்கதை அமைத்து கொடுப்பவராகவும் ஸ்டண்ட் டைரக்டராகவும், பணிபுரிந்து வருகிறார்.

- நடிகர் அசோகன் ஒருபட்டதாரி அவருடைய பொழுது போக்கு விதவிதமான 'டோர்ச் லைற்'கள் சேகரிப்பது.

- எகிப்திய ஜனாதிபதி அன்வர் சாதாத்தின் சுயசரிதை "இன் சேர்ச் ஒவ் ஐடென்டிற்றி" என்ற பெயரில் திரைப்படமாகிறது,

- சோவியத் ரஷ்யாவில் குழந்தைகளுக்காக மட்டும் 28 பத்திரிகைகள் வெளியாகின்றன. அவற்றின் சராசரி விற்பனை 85 லட்சம் பிரதிகள்.

- உங்களுக்குப்பிடித்த இரு அழகிகள் யார் எனக் கேட்ட கேள்விக்கு சௌந்தராகைலாசம் கூறிய பதில்:

  "அழகு வயதைப்பொறுத்தது அல்ல. இசை யோகி எம். எஸ். சுப்புலட்சுமியும், முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தியும் நான்விரும்பும் இரண்டு அழகிகள் எத்தனை வயதானால் என்ன? இருவர் முகங்களில்தான் எத்தனை களை!" எனப் பதில் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்மணி

மாணவ மணிகளே!

உங்களுக்காக தொடக்கப் பெற்ற 'கண்மணி' பகுதியை ஏராளமானோர் வரவேற்றுப் பாராட்டியுள்ளனர்! உங்களின் ஆக்கங்கள் அவ்வப்போது தரம் கண்டு பிரசுரிக்கப்படும். நீங்கள் உங்கள் ஆக்கத்துடன் உங்கள் பாடசாலையைக் குறிப்பிடத்தவற வேண்டாம்.

**வி. சந்திரகுமார்**

---

## கோண்டாவில் பாட்டி

முன்னொரு காலத்தில் கோண்டாவில் என்னும் சிற்றூரில் 'பொன்னம்மா' என்னும் வயது முதிர்ந்த கிழவி ஒருத்தி வசித்து வந்தாள். பொன்னம்மாவின் வாழ்க்கையில் முதுமைதட்டிய போதிலும் அவளது செயலிலும் புத்திச் சாதுரியத்திலும் இன்னமும் இளமை நிறைந்திருந்தது! பொன்னம்மாக் கிழவியும் அவ்வூரிலுள்ள அனைவருக்கும் இல்லையெனாது உதவிபுரிந்து வந்தாள். இதனால் எல்லோரும் அவள்மீது தனிமதிப்புவைத்திருந்தனர்.

சிறிது காலம் செல்ல அவ்வூரிற்கு கொள்ளையிலும், கொலையிலும் பெயர்போன ஒரு கொள்ளைக் கூட்டம் வந்து நித்தமும் முறைவைத்து ஒவ்வொரு வீடாக கொள்ளையடித்து வந்தது. இத்தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வரவே கோண்டாவில் மக்கள் சொல்லொணு துன்பமடைந்தனர்.

இவற்றையெல்லாம் கேள்வியுற்ருள் பொன்னம்மாக்கிழவி கொள்ளைக் கூட்டத்தினரால் மக்கள் படும் துன்பம்கண்டு மனம் வருந்தினுள். அவளும் 'இந்தக் கொடிய கொள்ளைக் கோஷ்டியினரை புத்திசாதுரியத்தினுலேயே இவ்வூரை விட்டு விரட்டுகிறேன்' எனக் கங்கணம் கட்டினுள். அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கலானுள்...

பொன்னம்மாக்கிழவி எதிர்நோக்கிய சந்தர்ப்பமும் விரைவிலேயே வந்தது. அன்று பொன்னம்மாக் கிழவியின்வீடு கொள்ளையிடப்படும் முறை என அறிந்த பொன்னம்மா உடனே தன்னிடமிருந்த பணத்தில் ஒரு மூடை அரிசிவாங்கி நன்கு மூக்கைத் துளைக்கும் நெய்ச்சாதம் சமைத்தாள்.

சிறிது நேரத்தில்...! கொள்ளையிலும், கொலையிலும் பெயர்பெற்ற பயங்கரக் கொள்ளைக்கூட்டம் பொன்னம்மாக் கிழவி வீட்டையடைந்தது! பொன்னம்மாவும் அவர்களையெல்லாம் இன்முகத்துடன் வரவேற்று... தம்பிமார்களே! நீங்கள் அதிகம் களைப்பாக இருக்கிறீர்கள் போன்று தோன்றுகின்றது... இல்லையா...? எனவே நீங்கள் முதலில் உங்கள் களைப்பாற நெய்ச்சாதம் இடுகிறேன் உண்டுவிட்டு உங்களுக்கு வேண்டியதை எடுத்துச் செல்லுங்கள்! என்ருள்.

கள்வர்கள் நீண்டதூரம்வந்த களைப்பு ஒருபுறம், பசி வயிறைக் கிள்ளவே கிழவியின் நெய்ச்சாதமும் மூக்கை துளைக்கவே அவர்களும் 'சரி' என உண்பதற்கு உட்கார்ந்துவிட்டனர்...

பொன்னம்மாக் கிழவியும் அனைவருக்கும் இலைபோட்டு மூக்கைத் துளைக்கும் சுவைமிகுந்த நெய்ச்சாதத்தை பரிமாறினுள். கள்வர்களுக்கு இருந்த பசிக்கு பொன்னம்மாவின் ருசிமிக்கநெய் சாதம் தேவாமிர்தம் போலிருந்தது. அவர்களும் மளமளவென்று உண்ணலானுர்கள்... இதைப்பார்த்து பொன்னம்மா மனதுள் சிரித்துக்கொண்டாள்.

அப்போது திடீரென...! கள்வர் கூட்டத்தலைவன் 'ஐயோ...! சீ என்ன காரியம் செய்துவிட்டோம்... எமது தொழிலுக்கே மோசம் வந்துவிட்டது... உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யலாமா...? இனி இங்கு களவாடமுடியாது!' என்கத்தினுன். உடனே அனைவரும் உண்பதை பாதியிலே நிறுத்திவிட்டு அங்கிருந்து கிளம்பி அவ்வூரை விட்டே சென்றுவிட்டனர்! பொன்னம்மாக்கிழவி வாய்விட்டுச் சிரித்தாள்.

கொடிய கள்வர் கூட்டத்தை புத்திசாதுரியத்தால் அவ்வூரை விட்டே விரட்டியதை அறிந்த கோண்டாவில் மக்கள் தமது சொல்லொணு துன்பத்திற்கு முடிவு கட்டிய பொன்னம்மாக் கிழவியின் புத்திக் கூர்மையை வியந்து வாயாரப் பாராட்டலானுர்கள்! பலரும் மெச்சினுர்கள்!

---

## புதிர்

பத்தடி ஆழமான கிணற்றுள் ஒரு தவளையுண்டு அதுவெளியே வரவேண்டும். தவளையானது இரண்டடி தாவினுல் ஒருஅடி கீழே சறுக்குகிறது. அப்படியாயின் எத்தனையாவது தடவை தவளை தாவும்போது கிணற்றிலிருந்து வெளியேவரும்?

விடை:
ஒன்பதாவது தாவலில்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொங்குதே புன்நகை



—கௌரி

டேஷன் மாஸ்டர்; இன்றிரவு மெயில் ரயிலுக்கு நாலாம் நம்பர் உறங்கலிருக்கை ஆசனம் பதிவு செய்துவிட்டுப் பிறகு ஏன் கான்சல் பண்ணுகிறீர்கள்?

பிரயாணி: எனக்கு அடுத்தாற்போல் இருக்கிறவர் பெயர் சுப்பையாதானே.


டேஷன் மாஸ்டர்: ஆமாம்.

பிரயாணி: அவருடைய வீட்டிலே தானிருக்கிறேன். அவருக்கு வாடகைப்பாக்கி கொடுக்க வேண்டும்.

● நான் ஒரு அருமையானகதை எழுதியிருக்கிறேன். அதில் வரும் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் உயிருடன் நடமாடுகின்றன.

□ அப்படியானல் வேண்டாம். அவர்கள் எங்கள்மீது வழக்குப் போட்டுவிடக்கூடும்.

● ? ? ?




● உங்க மனைவி ஏதோவெல்லாம் உளறிக்கொண்டே இருக்கிருளே என்ன திடீரென்று இப்படி?

□ அதுவா? தலையிலே பேன் மருந்தை தடவியபின் ஊற விடவும் என்று போத்தலில் போட்டிருந்த வாசகத்தில் தவறுதலாக உளர விடவும் என்று போட்டுவிட்டார்கள்

கணவன்: (பஸ்ஸிற்குள்) இந்தா பார். காலையிலே ஒன்னும் சாப்பிடாமே புறப்பட்டுவிட்டேன். இப்போ வயிறுபுகையத்தொடங்கி விட்டது. என்ன செய்வது?

மனைவி; வாயை மூடுங்கள். பஸ்ஸிற்குள் புகையிறது தெரிந்தால் அபராதம் கட்டவேண்டிவரும்.



● உங்கள் மகன் நான்வெளியே புறப்படுகிற நேரம் பார்த்து எங்கே போகிறீர்கள் என்று எப்ப பார்த்தாலும் கேட்கிருன். கொஞ்சம் கண்டிச்சு வையுங்க. இப்பவே இப்படியென்ருல் பின்னுக்கு என்ன ஆவது?

□ கவலைப்படாதீர்கள். பஸ் கண்டாக்டரா வருவான்.

● வீடுகட்ட சீமந்திற்குப் பேயாக அலைந்து திரிந்த ஒருவர் கடைசியில் தன் மனைவி சொன்னர். நான் இறந்த பிறகு சீமந்து கிடைத்தால் நான் பாதியில் நிற்பாட்டிய வீட்டை எனது நினைவுமண்டபமாக மாற்றிக்கட்டிவிடு.



● வீட்டில் என்மனைவி என்னை ராக்கிங் செய்கிருள்,

□ அடபாவமே! எப்படி?

● தான்சமைத்த சாப்பாட்டை நான் சாப்பிடவேண்டுமென்று.

● பையனை ஏன் இப்படிப் போட்டு அடிக்கிறீர்கள்,

□ பின்னே என்ன பாருங்கள் விளக்கேற்ற மண்ணெண்ணை வாங்கிவரும்படி இரண்டு ரூபா கொடுத்தேன். அதுக்கு இவன் 'தீபம்' மெட்னி பார்த்து விட்டுவருகிருன்.

● வீட்டிலே பற்றுக்குறைஎன்று உன்மனைவி கவலைப்படுவதாகச் சொல்கிருயே. என்னபற்றுக்குறை.

□ முன்பு நாலு விளக்குகள் பாவிப்பாள். இப்போ மண்ணெண்ணை விலையேற்றத்தால் ஒருவிளக்குத்தான் பற்றவைக்கிருள்.

● தனது கடிதங்களை தவருகடைப் அடிக்கும் தட்டெழுத்தாளரை மனேஜர் பின்வருமாறு திட்டினர். அடுத்த பிறவியில் நீர் மரங்கொத்தியாகப் போகக்கடவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்டலுக்கு ராதா

காலஞ்சென்ற நடிகவேள் எம். ஆர். ராதா திரை உலகில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்தவர் நடிப்பில் அனுயாசமாகக் குரலைப்பல தினுசில் மாற்றுவதுமின்றி சீர்திருத்தம், அரசியல், எல்லாம் அதில் பொதிய வைத்திருப்பார். எதையும் துணிந்துபேசும் ஆற்றல் கொண்டவர். எனது நாடகத்துக்கு எப்பவும் பொலிஸார் இருப்பது எனக்கு சந்தோஷம் என்பார். ராதா இல்லாத படம் சாதா என்று ஒருகாலத்தில் பேசினுர்கள். அவரின் பேச்சுக்கள் அனேக சினிமாக்களில் இடம் பெற்றன. இதோ அவற்றில் சில.

- குழாயிலே தண்ணிமட்டுமா விடறுங்க, மீன்குஞ்சும் விடறுங்க. இதுக்கு நாம கார்ப்பரேஷனைப் பாராட்டணும்.
- (பாகப்பிரிவினை படத்தில்) மேனுட்டிலே இரண்டு குழந்தை பெத்துட்டா அப்பன் வேறே அம்மா வேறேயா பிரிச்சிடுவாங்க. இங்கே அப்படியில்லே குடும்பக் கட்டுப்பாடு நம்ம நாட்டுக்கு எங்கே வரப்போவுது?
- (பாகப்பிரிவினையில் ஜெயிலுக்குப் போகும்போது) ஊரிலே இருக்கிற அயோக்கியப் பசங்களெல்லாம் வெளிலே இருக்கிறுங்க. நம்மப்போல யோக்கியனுங்களெல்லாம் உள்ளே போறேம். காலம் கெட்டுப்போச்சு.
- இந்தாய்யா! இது கள்ளநோட்டுப்பணம். ஒரே இடத்திலேயே மாத்தாதே சந்தேகம்வரும். இடம் மாத்தி மாத்து.
- ஏனய்யா சாயப்பு! உம்ம மகனுக்கு உடம்புமோசம் எங்கிறதுக்காக நீ ஏனய்யா அழறே. பணம் கொடுத்த நான் தானேய்யா அழணும்.
- நீங்களெல்லாம் கிராமத்துப்பசங்க நல்லவங்க. நேர்மையானவங்க. சொன்னபடி நடப்பீங்க. ஆனதுனலே இப்போ நான் வாங்கியிருக்கிற சேரியைவிட்டு விடிய முந்திப் போயிடுங்க.
- மேடைபோட்டு ஊரிலே இருக்கிற எல்லாப் பயல்களையும் கூட்டம் போடவைச்சு பேசுறவனுக்கு மாலைமாலையாப் போட்டு தலைக்கு ஐஸ்வைக்கிறுங்க அது கூட்டத்திலே வந்திருக்கிறவங்களுடைய காரியத்துக்கா? ஊஹூம் எல்லாம் அவனவன் காரியத்துக்குத்தான்
- (கோவில் மண்டபத்தில்) ஏனய்யா கணக்கப்புள்ளே கோவிலிலே பூஜை நடத்திக்கிட்டிருக்கிறபோது கெவனிச்சியா?

ஆமாங்க தீபாராதனை ரொம்ப நன்ன இருந்தது. சுத்த முட்டாளய்யா நீ. தீபாராதனை நடக்கிற போது மாணிக்கம் நின்னு கும்பிட்டபடி இருந்தானே. அவனை ஏனய்யா கவனிச்சுபோய் நம்ம பணத்தை கேட்காமவிட்டே.

தொகுப்பு: மனேரமா


**A. K. Selvanayagam. Television Technology Institute.**

- தொலைக்காட்சிக் கருவிகளின் இயக்கம்—பராமரிப்பு—பழுது பார்த்தல் போன்றவற்றின் பூரண பயிற்சி.
- வர்ணத் தொலைக்காட்சி பற்றிய பூரணத்துவமான பாடங்கள்.
- சிற்றி அன்ட் கில்ஸ் (லண்டன்) [City & Guilds (Lond)] பரீட்சை எடுப்பவர்களுக்கான விசேட ஒழுங்குகள்.
- மாணவர் தொகுதிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

**ஆ. க. செல்வநாயகம் தொலைக்காட்சி, தொழில்நுட்ப கல்வி நிலையம்.**

விபரங்களுக்கு:
**97, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

அழகுக் கலைக்கோலம் தரும்
அற்புதப் புடவைத் தினிசுகளுக்கு
ஒப்பற்ற இடம்.
சிங்காரம்ஸ்

நங்கையர் நாடும் நவநாகரீக நகைகளுக்கு


**டைமா நகைமாளிகை**

செட்டியார் தெரு.
தொலைபேசி: 20875. கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவியின் குரல்



மக்கள் கவிஞர்
**பட்டுக்கோட்டை**
**கல்யாணசுந்தரத்தின்**

நினைவு நாள் இம்மாதம் 3ம் திகதி அதையொட்டி இக்கவிதை பிரசுரமாகிறது.

கவிஞர் பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம் காலமடைந்த போது கவிஞர் கண்ணதாசன் பாடிய இரங்கற் பாடல்களின் சில அடிகள்...

விழுதுவிட வந்த மகன்
விழுந்துவிட்டான் சாவினிலே!
அழுதால் வருவானே?
அரற்றுவதால் கிடைப்பானே?
ஆறோடி நீரோடி
அழகிழந்த விழிகளெல்லாம்
போராடிக் கொண்டுவரப்
போமோ அவனுயிரை
தன்னுயிரைத் தருவதினுல்
தங்கமகன் பிழைப்பானே?
என்னுயிரைத் தருகின்றேன்
எங்கே என் மாகவிஞன்?

# சுவைத்தேன்

**ரவிசங்கர்**

● சிசுபாலன் என்ற அரக்கன் செய்யும் குற்றங்களை நூறு ஆகும்வரைதானே கிருஷ்ணர் மன்னித்தார் நாம் கிருஷ்ணரைவிடப்பொறுமை சாலிகள் மன்னிப்பதில்.

□ எப்படி?

● நிகழ்ச்சியில் ஏற்பட்ட தவறுக்கு மன்னிக்கவும் என்று ரேடியோ சொல்லும்போது மன்னித்துக் கொண்டுதானே இருக்கிறோம்.

பாண்டவர்கள்; அண்ணா நாங்கள் பூலோகம் சென்றுவர ஆசைப்படுகிறோம்.

தருமர்: எதற்காக?

பாண்டவர்கள்; முன்பு துரியோதனனிடம் ஐந்து கிராமங்கள் அல்லது ஐந்து வீடுகள் கேட்டோம். கிடைக்கவில்லை. இப்போ அரசாங்கம் மாதிரிக்கிராமம் மாதிரி வீடுகள் என்று சனங்களுக்குக் கொடுக்கிறதாம்.

ஆஸ்பத்திரிகளில் திருட்டுத்தனமாகக் குழந்தைகளை மாற்றி வைக்கப்படும் சம்பவங்களைப் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறோம். இன்றுமட்டும் இது நடக்கவில்லை முற்காலத்திலும் உண்டு. தேவகிக்குப் பிறந்த ஆண்குழந்தையான கிருஷ்ணரை வசுதேவர் ஒருவருக்கும் தெரியாமல் தூக்கிக் கொண்டுபோய் யசோதையிடம் சேர்த்துவிட்டு யசோதையின் பெண் குழந்தையை தேவகியின் படுக்கையில் மாற்றிவைத்தார்.

அந்த இளம்பெண் தனது தலையை நிறைய கனகாம்பரப்பூக்களால் அலங்கரித்திருந்தாள் ரயில் பெட்டியின் எதிர் ஆசனத்திலிருந்த இளைஞனுக்குச் சும்மா இருக்க முடியவில்லை. பூமரம்தலையில் இருக்கிறது என்று கிண்டல் செய்தான். உடனே அப்பெண் உன் தலைமயிர்தோள்பட்டைக்கும் கீழேவந்து விட்டதே. உனக்கும் பூ வேண்டுமானல் தருகிறேன் என்றதும் இளைஞன் முகம்போன போக்கைப் பார்க்கவேண்டும் ரயிலில் சிரிப்பொலியும் உண்டானது.

கண்தெரியாது போகும் ஆச்சி மதவிற்குள் விழாமல் எச்சரிக்கை பண்ணும் ஊர் எது?

மதவாச்சி

பிள்ளைகளைக் கண்டித்து வளர்க்கும்படி பெற்றோருக்கு அறிவுரை கூறும் ஊர்எது?

கண்டி

நாவல்களிலேயே முழுகிப்படிக்கும்படி சொல்லும் ஊர்எது?

நாவற்குழி

மரண அத்தாட்சிபெற முடியாத கச்சேரி எது?

சாவகச்சேரி

எது கேட்டாலும் இல்லை என்று பதில்தரும் ஊர்எது?


காலி

கார் விபத்தில் அகப்பட்டுப் பலத்த காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரி வாட்டில் இருக்கும் ஒருவரை அவர் நண்பர் வந்து பார்த்தார். அன்றையதினம் விபத்திலகப்பட்டவரின் பிறந்தநாள் என்று அந்த நண்பர் அறிந்ததும் விபத்திலகப்பட்டுக் கிடப்பவரை ''இன்றுபோல் என்றும் வாழ்க'' என்று வாழ்த்திப்போனுர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் சிரிப்பு



மனைவி: இவ்வளவு காலமும் உங்க மாப்பிள்ளை கடிதமெழுதும் போது வணக்கம் என்றுதான் எழுதுவார். இப்போகொஞ்ச நாளாக கோடி வணக்கம் என்று எழுதுகிறுர் பார்த்தீர்களா?

கணவன்: போடி அசடு. தீபாவளி வருகிறதல்லவா? நைசாக கோடிஎன்று வேட்டி,புடவை வாங்கித் தரும்படி ஞாபகப் படுத்துகிறுர்.



● இந்த நரகாசுரன் சாகும் போது பேசாமல் சாகப்படாதா? சாகும்போதும் கிருஷ்ணரிடம் கோரிக்கை கேட்கப்போய் என்பாடு சங்கடமாகி விட்டது.

□ என்ன சங்கடம் உங்களுக்கு?

● தீபாவளியன்று துணிமணி வாங்க ஏகப்பட்டசெலவு.



● தீபாவளியா தீபாவலியா சரி

□ தீபாவலி என்பதுதான் சரியென்பேன். ஏனென்ருல் சாப்பாடு வயிற்றை வலிக்கும். செலவைப்பார்த்து நெஞ்சை வலிக்கும், வெடியோசை காதை வலிக்கும், மொத்தமாக யோசித்துப் பார்த்தால் மண்டை வலிக்கும்,



● எங்கள் காரியாலயத்திலுள்ள டைபிஸ்ட்மிஸிஸ், வைத்திஞதன் தீபாவளியன்று ஒரு சாதனையை நிலைநாட்டி விட்டார்.

□ என்ன சாதனை?

● விடிய தீபாவளி பிறந்தது முதல் மாலை அது முடியும் வரை நிமிஷத்துக்கு ஒருபுடவையா எழுநூற்றிருபது புடவை வாங்கிக்கட்டிஞ.

குடிகார ஆசாமி: (வெறியில்)இந்தாய்யா!ரெண்டிலே ஒண்ணு இன்னைக்கு எனக்குத் தெரிஞ்சாகணும்.

பெரியவர்: இந்தாப்பா! நீ இப்போ இருக்கிற நிலையிலே உனக்கு ஒண்ணிலே ரெண்டு தான் தெரிஞ்சு கொண்டிருக்கும்.


● ஆப்பரேசன் தியேட்டரில் இருந்து அந்த டாக்டர் ஏன் சந்தோஷமாக வருகிறுர். ஆபரேசன் வெற்றியா?

□ இல்லை! போனவருடம் காணுமல் போன அவருடைய கத்தரிக்கோல் இன்று ஒரு பேஷண்டின் வயிற்றில் இருந்து கிடைத்துவிட்டது.

● நம்ம தலைவர் வெட்டுஒன்று துண்டு இரண்டாகப் பேசுவதன் காரணம் இப்போதான் தெரிந்தது.

□ என்ன காரணம்.

● அவர் வயிற்றை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தபோது அதற்குள் கத்தரிக்கோல் இருக்கிறதாம்,



● நேற்றுநான் ஆபரேசன் செய்த நோயாளி ஒருதிரைப் படதணிக்கை அதிகாரிபோலிருக்கிறது,

□ ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்.

● ஆபரேசன் செய்துபார்த்த போது அவர் வயிற்றில் ஒரு கத்தரிக்கோல் இருந்தது.

**ச. ரா. பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தனிலே...

★ சகலவித சாய்ப்புச் சாமான்களுக்கும்

★ விளை பொருட்களுக்கும்

விஜயம் செய்யுங்கள்:

## ஏ. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ்

பரந்தன் சந்தி பரந்தன்



நினைவிருக்கட்டும்
யாழ்நகர் நவீன சந்தையிலே!

சகலவிதமான

- △ சேட்டிங்
- △ சூட்டிங்
- △ அழகு சாறிகள்
- △ அன்பளிப்புப்பொருட்கள்

பெறுவதற்கு அருமையான புடவை நிலையம்

## மணியம் ரெக்ஸ்ரைல்ஸ்

16, நவீன சந்தை யாழ்ப்பாணம்



அன்பளிப்பு

## அம்பாள் ஸ்ரோர்ஸ்

ஸ்ரேசன் ரோட்,
கிளிநொச்சி.



பருத்தித்துறையிலே....

- அழகுக்கு அழகு செய்யும் ஆடைகள்
- சேட்டிங்
- சூட்டிங்
- சிறுவர்க்கேற்ற கவுண்கள்
- அலுமினியப் பாத்திரங்கள்.

நிதானமான விலையில்பெற
விஜயம் செய்யுங்கள்.

## மொடேண் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாண வீதி, பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு இலக்கம் பி. கியூ. 35/000

தையலர்களின் இதயம் கவர்ந்த தையல் நூல்கள்!

- முயல் மார்க் தையல் நூல்
- டாம் மார்க் சில்க் தையல் நூல்

வகை வகையான வர்ணங்களில் எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட்
மனுபக்சரிங் கம்பனி
கொழும்பு 12.

559, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால், 559, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org